# 2013-14 NEWSPAPER CUTTINGS

## A safe haven for women students

With a vision to transform rural girls into independent working women, Theivanai Ammal College for Women in Villupuram talks about how they are cultivating a safe and conducive environment for women students and about their many achievements…

**THE BEGINNING**

About 156 kms from Chennai lies Villupuram district, the second largest district in Tamil Nadu. In terms of literacy, the numbers were at a low until the 1980s. However, the literacy rate started picking up post that year and is now at an all time high of 75 per cent. Education is important to the residents of Villupuram which is why Thiru. E. Swamikkannu's sincere and unrelenting efforts have led to the establishment of E.S. Educational Charities. As the founding chairman, he has established several institutions that have helped in uplifting the people of Villupuram, the most backward region of Tamil Nadu. Theivanai Ammal College for Women popularly known as TACW was established in the year 1989 striving with the vision of empowering rural women.



**Thiru.S. Senthil Kumar**
**Secretary, TACW**

**Statistics and Programmes**

Nearly 73 percent of students are first generation learners, 94 per cent are from an economically and socially deprived background, 48 per cent of them are from Tamil medium schools and 50 per cent from rural areas. Hence special attention is required for the overall holistic development of students. TACW promotes this through a diverse list of academic and extra-curricular programmes.

**Student Achievements**

The success of TACW is evident through its bright students who have been well placed in various fields like Software, Industry, Banks, Insurance Companies and Academia within the country and abroad. Ms. Sujitha of English Department has passed the preliminary test in IAS and Ms. Arulselvi NSS volunteer was selected to participate in the Republic Day Parade held at New Delhi (2010). Six of TACW's students got job opportunities at Sri Aravindar Eye Hospital, Puducherry. On an average, 30 students receive Form III certificates every year from Thiruvalluvar University which paves the way for them to be placed in the Tamil Nadu Police Department.

**The Future of TACW**

With all these laurels to their name, TACW completed 24 years of service in empowering the women of Villupuram region and marching towards its Silver Jubilee celebrations in 2013-14. With years of progress, the college aspires to raise its status to Theivanai Ammal Women's University in the near future.

**S. Senthil Kumar,**
**Secretary**
**TACW**

THE HINDU 27*06*13

உலகத் தரத்தில் உயர்கல்வி தரும்

## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

பெண்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மேதகு கல்வியாளர் சாமிக்கண்ணுவால் 1989-ஆம் ஆண்டு தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி விழுப்புரத்தில் தொடங்கப்பட்டு 24 ஆண்டுகளாய் கல்விப்பணியாற்றி வருகிறது. தேசிய கல்வி நிர்ணயக் குழுவின் மறு தரச் சான்றிதழில் 'ஏ' தகுதியினையும் ISO 9001 : 2008 உலகத் தர நிர்ணயக் குழுவின் சான்றிதழையும் திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் நிரந்தர அங்கீகாரத்தினையும் கல்லூரி பெற்றுத் திகழ்கின்றது.

கல்லூரியின் பெருமைமிகு செயலர் செந்தில் குமாரின் செயற்கரிய முயற்சியினாலும், சிறப்புமிகு கல்லூரி இயக்குநர் முனைவர் கஸ்தூரிபாய் தனசேகரனின் கடின உழைப்பினாலும் மாவட்டத்திலேயே முதல் தன்னாட்சிக் கல்லூரியாகத் திகழ்கிறது. தற்போது உலகப் புகழ்பெற்ற பல்கலைக் கழகத்துடன் ஒருங்கிணைந்து உலகத் தரமிக உயர்தரக் கல்வியினை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கல்லூரியின் செயல்பாடுகள்:** தலைசிறந்த வல்லுநர்களால் அமல்படுத்தப்பட்ட பாடத் திட்டம், வாழ்க்கைப் பயன்பாட்டுக் கல்வி, பன்மொழிப் புலமை, தொழிற்கல்வி, உடற்கல்வி, நுண்கலை நுட்பம், கணினி பயிற்சி போன்றவை கல்லூரியில் செயல்படுத்தப்பட்டுள்ளன. மாணவிகளின் ஆளுமைப் பண்பினையும், தனி மனிதத் திறனையும், விழிப்புணர்வையும் ஊக்குவிக்கும் வகையில் மாணவப் பேரவை, நாட்டு நலப் பணித் திட்டம், செஞ்சிலுவை சங்கம் போன்ற அமைப்புகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. கல்லூரியில் பயிலும் மாணவிகளில் முதல் தலைமுறை பயிலும் மாணவி, விவசாய குடும்ப மாணவி, பொருளாதாரத்தால் பின்தங்கிய குடும்ப மாணவி எனப் பகுத்து அவர்களுக்கேற்ப சிறப்பு வகுப்புகளும், உதவித் தொகையும், சிறப்பு சலுகைகளும் வழங்கப்படுகின்றன. கல்லூரியில் நன்கு பயின்று வெற்றி பெறும் மாணவிகள் உற்சாகப்படுத்தும் நோக்கில் ஆண்டு தோறும் கௌரவிக்கப்படுகிறார்கள். தொடர்ந்து எட்டு ஆண்டுகளாய் கைப்பந்து, கையுந்து பந்து, கூடைப்பந்து போன்ற விளையாட்டுகளில் கல்லூரி முதன்மை இடத்தைத் தக்க வைத்துள்ளது. சிறந்த விளையாட்டு வீராங்கனைகளுக்குக் கட்டணச் சலுகையும் அளிக்கப்படுகிறது. விழுப்புரம் மாவட்டத்திலேயே பெண்களுக்கென்று சிறப்பாக NCC (Army Wing) பயிற்சியும் அளிக்கப்படுகிறது.



**வேலைவாய்ப்பு வசதிகள்:** தேசிய மாநில அளவிலான போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் வகையில் வேலை வாய்ப்புப் பயிற்சிகள் மாணவிகளுக்கு அளிக்கப்படுகின்றன. புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தர் கண் மையத்தில் ஆறு மாணவிகளுக்கு வேலை வாய்ப்பும், ஐந்து மாணவிகளுக்கு காவல் துறையில் பணியிட வாய்ப்பும் பெற்றுத் தரப்பட்டுள்ளது. ஆங்கிலத் துறையின் பார்வையற்ற முன்னாள் மாணவி சுஜாதா இந்திய ஆட்சிப் பணிக்கான முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். மேலும் நாட்டின் தலைநகரான புது தில்லியில் கணினித் துறை சார்ந்த மாணவி அருள்மொழி குடியரசு தினவிழா அணி வகுப்பில் பங்கேற்றார் என்பது இக்கல்லூரியின் அரும்பணிக்கு மற்றொரு சான்றாகும்.

**கல்லூரியின் இலக்கு:** எளிய கிராமப்புற மாணவிகளை ஆற்றல்மிகு பெண்மணிகளாய் மாற்றுவதற்காகக் கல்விப் பாதையில் செயற்கரியச் செயல்களை ஆற்றிவரும் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியானது விரைவில் பெண்களுக்கான நிகர்நிலை பல்கலைக் கழகமாக உருவாவதை இலக்காகக் கொண்டு அரும் பணி ஆற்றி வருகின்றது என்றால் அது மிகையல்ல.

21*06*13




விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நடந்த தேசிய கருத்தரங்கை கல்லூரி நிறுவனர் சாமிக்கண்ணு குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். அருகில் என்.ஏ.ஏ.சி., துணை ஆலோசகர் சியாம் சுந்தர், டாக்டர் ஜெயக் குமார், கல்லூரி செயலாளர் செந்தில்குமார்.

தினமலர் 22*06*13

## தெய்வானை அம்மாள் கல்லூரியில் உயர் கல்வி மேம்பாடு கருத்தரங்கம்

விழுப்புரம், ஜூன் 22-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயர்கல்வி மேம்பாடு குறித்து கருத்தரங்கம் நேற்று துவங்கியது.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், உயர்கல்வி தரம் மற்றும் மேம்பாடு குறித்து இரண்டு நாள் கருத்தரங்கம் நேற்று காலை துவங்கியது. கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு தலைமை தாங்கினார்.

கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் வரவேற்றார். கல்லூரி செயலாளர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார்.

திருவள்ளுவர் பல்கலைக் கழக பதிவாளர் ஜெயக்குமார், பெங்களூரு என்.ஏ.ஏ.சி., துணை ஆலோசகர் சியாம்சுந்தர், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக பேராசிரியர் அமுதா சிறப்புரையாற்றினர்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, புதுச்சேரி, வேலூர், தஞ்சாவூர், சிதம்பரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## தேசிய அளவிலான கருத்தரங்கம்

விழுப்புரம், ஜூன் 21: உயர்கல்வியில் தரம் மற்றும் சிறப்பு குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கம் விழுப்புரத்தில் வெள்ளிக்கிழமை தொடங்கியது.

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் இரு தினங்கள் நடைபெறும் இக் கருத்தரங்குக்கு திருவள்ளுவர் பல்கலைக்கழகப் பதிவாளர் எம்.ஜெயக்குமார் தலைமை தாங்கினார். பெங்களூரைச் சேர்ந்த நாக் கமிட்டி துணை ஆலோசகர் ஷியாம்சுந்தர் தொடங்கி வைத்து பேசினார். கல்லூரி தாளாளர் இ.சாமிக்கண்ணு, செயலர் எஸ்.செந்தில்குமார், இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன் உள்ளிட்ட பலர் பங்கேற்று பேசினர்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, புதுச்சேரி, வேலூர், தஞ்சாவூர், சிதம்பரம் போன்ற நகரங்களிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் இருந்து சுமார் 250-க்கும் மேற்பட்ட புகழ் வாய்ந்த பேராசிரியர்கள், பேரறிஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேசிய கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி துவக்கிவைக்கிறார் கல்லூரி தாளாளர் ஏ.சாமிக்கண்ணு.

தினமணி 22*06*13




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த 2 நாள் தேசிய அளவிலான கருத்தரங்கினை கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தபோது எடுத்த படம். அருகில் கல்லூரி செயலாளர் செந்தில்குமார் உள்ளார்.

**விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்**

# தேசிய அளவிலான கருத்தரங்கம்

## 2 நாட்கள் நடைபெற்றது

தினத்தந்தி 25*06*13

விழுப்புரம்,ஜூன்.25-
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தேசிய அளவிலான கருத்தரங்கம் 2 நாட்கள் நடைபெற்றது.

### கருத்தரங்கம்

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் என்.ஏ.ஏ.சி. (நாக்) அமைப்பு நிதி உதவியுடன் தேசிய அளவிலான 2 நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. கல்லூரி தாளாளர் கல்வியாளர் சாமிக்கண்ணு தலைமை வகித் தார்.

கல்லூரி செயலாளர் இ. எஸ்.செந்தில்குமார் கலந்து கொண்டு சிறப்பு விருந்தினர் மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுகளை வழங்கி பேசினார்.

மதுரை லேடி டோக் கல்லூரி முதல்வர் டாக்டர் மெர்சி புஷ்பலதா கலந்து கொண்டு கருத்தரங்கத்தை தொடங்கி வைத்து கல்லூரியின் சிறந்த நடைமுறைகளும், சிறப்பு திறனும், என்ற தலைப்பில் பேசினார். அப்போது அவர் கூறியதா

வேண்டும். புதிய கண்டுபிடிப்புகள், சிறப்புகள், அவற்றின் திறன்கள் ஆகிய 3-ம் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகும். விழுப் புரம் மாவட்டத்தில் தரம் வாய்ந்த கல்லூரியாக தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி விளங்குகிறது என்று கூறினார்.

### தரமான உயர்கல்வி

2-வது நாள் கருத்தரங்கில் வேலூர் வி.ஐ.டி. பல்கலைக் கழக எஸ்.ஐ.டி. முதுநிலை பேராசிரியரும், புல முதன்மையருமான டாக்டர் சரவணன் கலந்து கொண்டு தரமான உயர் கல்விக்காக ஐ.சி.டி. என்ற தலைப்பில் பேசினார். பேராசிரியர்களின் கல்வி பயிற்றுவிக்கும் முறை மாணவர்களின் ஆர்வத்தை தூண்டி ஈர்க்கும் வகையில் உயர் கல்வி அமைய வேண்டும்.

வலை தளத்தில் (இன்டர் நெட்) முக்கியத்துவத்தையும், அதனுடைய வகைகளையும், வழிமுறைகளையும் பற்றி தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறினார். புதுச்சேரி

அம்மாள் கல்லூரியின் ஐ.க்யு.ஏ.சி. ஒருங்கிணைப்பாளர் டாக்டர் பாண்டியராஜ், புதுச்சேரி காஞ்சி மாமுனியர் பட்டமேற்படிப்புமையத்தின் டாக்டர் அறவாழி இருசப்பன், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் பேராசிரியர் ஸ்ரீதேவி, கலவை ஆதிபராசக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி ரவீந்திரன், திருவண்ணா மலை கலைக்கல்லூரி இயற்பி யல் பேராசிரியர் சுகன்யா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## புத்தொளி பெருவிழா

விழுப்புரம், ஜூலை 4-

விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில், முதலாமாண்டு மாணவியர்களுக்கான புத்தொளி பெருவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது.

சவுந்திரராஜன் வரவேற்றார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் தலைமை தாங்கினார். தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் நடேசன், சென்னை அண்ணா பல்கலைக் கழக பேராசிரியர் செல்வம், தெய்வானையம்மாள் கல்லூரி பேராசிரியர்கள் சாந்தி, அருணாகுமாரி, நங்கை கலந்து கொண்டனர். தமிழ் துறை பேராசிரியர் பொற்கலை நன்றி கூறினார்.



விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில், முதலாமாண்டு மாணவிகளுக்கான புத்தொளி பெருவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது.

தினமலர் 04.07.13

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

## முதலாம் ஆண்டு மாணவிகளுக்கு வரவேற்பு விழா

விழுப்புரம், ஜூலை 2: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவிகளுக்கு வரவேற்பு விழா கல்லூரி கலையரங்கில் நேற்று காலை நடந்தது. கல்லூரியின் மாணவ புல முதன்மையர் சவுந்திரராஜன் வரவேற்றார். இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கல்லூரி இயக்குனர் முனைவர் கஸ்தூரிபாய் தனசேகரனை, பொருளாதார துறைத்தலைவர் பேராசிரியர் சாந்தி அறிமுகப்படுத்தினார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்கள் குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் தேர்வு கட்டுப்பாட்டாளர் நடேசன் பேசுகையில், வாழ்வியல் பாடங்களை மாணவிகள் கற்கவேண்டும் என்றும் சமூகத்தில் எதிர்கொள்ள வேண்டிய இன்னல்கள் பற்றியும் கூறினார்.

இயக்குனர் முனைவர் கஸ்தூரிபாய் தனசேகரன் உயர்கல்வி படிப்பதற்கான வழிமுறைகளையும் அதன் பயன்கள் பற்றியும் கூறினார். மேலும் சுயமாக சிந்திக்கும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆர்வம், ஈடுபாடு, விடா முயற்சி, கடின உழைப்பு போன்ற குணநலன்கள் இருந்தால் வெற்றி பெற முடியும் என்றும் கூறினார். தமிழாய்வுத்துறை பேராசிரியர் முனைவர் பொற்கலை நன்றி கூறினார்.

இதை தொடர்ந்து மதியம் முதலாம் ஆண்டு மாணவிகளுக்கு புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக சென்னை அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர். செல்வம் கலந்து கொண்டார்.

வணிக மேலாண்மை துறைத்தலைவர் பேராசிரியர் அருணாகுமாரி வரவேற்றார். இயக்குனர் முனைவர் கஸ்தூரிபாய் தனசேகரன், செல்வத்திற்கு நினைவு பரிசு வழங்கினார். பின்னர் செல்வம் பேசுகையில், கல்வியின் இலக்கணம் பற்றி கூறினார். வாழ்க்கை பலம் பெற சிந்திக்கும் ஆற்றலை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்றும், நிறைவாகும் வரை முறைவாக இரு எனும் வாழ்வியல் இலக்கணத்தை பற்றியும் கூறினார்.

கற்பனை திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். சிந்தனை, இரக்கம், உண்மை, வீரம், ஈகை போன்ற பண்புகளை பெற்றவராக திகழ வேண்டும்' என்று பேசினார். உயிர்வேதியியல் துறை தலைவர் பேராசிரியர் அருள்நங்கை நன்றி கூறினார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த விழாவில் கலந்துகொண்டவர்கள். உள்படம்: பேராசிரியர் டாக்டர். செல்வம் பேசினார்.

தினகரன் 02.07.13

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் பாடத்திட்ட ஆலோசனை கூட்டம்

விழுப்புரம், ஜூலை 14: விழுப்புரத்தில் உள்ள தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நேற்று காலை 5வது பாடத்திட்ட ஆலோசனை ஆணைக்குழுக்கூட்டம் நடந்தது. வணிக மேலாண்மை துறைத்தலைவர் அருணா குமாரி வரவேற்றார். சிறப்பு குழு உறுப்பினர்கள் திருவள்ளுவர் பல்கலைக்கழக விலங்கியல் துறைத்தலைவர் சிங்காரவேலு, அறிஞர் அண்ணா அரசு கல்லூரி இணை பேராசிரியர் சேகர், ஸ்ரீமகாலட்சுமி மகளிர் கல்லூரி முதல்வர் சிவா, திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் கணிதத்துறை பேராசிரியர் சித்ரா, சென்னை எத்திராஜ் கல்லூரி ஆங்கிலத்துறை தலைவர் பத்மினி விஸ்வநாதன், செயின்ட் தாமஸ் கல்லூரி ஓய்வு பெற்ற முதல்வர் செல்வராஜ், புதுவை அரவிந்தர் பொறியியல் நிறுவனம் சஷிதர், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக கணிதத்துறை தலைவர் கோபிநாத் கணபதி, கல்வியியல் துறைத்தலைவர் ராம்கணேஷ், தேர்வுக்கட்டுப்பாட்டு அதிகாரி நடேசன் ஆகியோர் பேசினர்.

கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் பேசுகையில், கடந்த ஆண்டை விட இந்தாண்டு அதிக மாணவியர் சேர்க்கை நிகழ்ந்ததற்கு முந்தைய ஆண்டின் தரமான பாடத்திட்ட அமைப்பே காரணம் என கூறினார்.

பின்னர் செயலர் செந்தில்குமார் பேசுகையில், கல்லூரியின் பல்வேறு வியக்கதக்க வளர்ச்சிகளை குறிப்பிட்டார். தேசிய தரச்சான்றிதழ் குழு அமைப்பின் மூலம் நிகழ்த்தப்பட்ட மாநாட்டில் பல்வேறு பேரறிஞர்கள் கலந்துகொண்டது. கல்லூரியில் அயராது உழைக்கும் பணியாளர்களே இதற்கு காரணம் என்றார்.

உயிர்வேதியியல் துறைத் தலைவர் அருள் நங்கை நன்றி கூறினார்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 5வது பாடத்திட்ட ஆலோசனை கூட்டம் செயலர் செந்தில்குமார் தலைமையில் நடந்தது.

தினகரன் 14-07-13

# பாடத் திட்டத்தில் திருத்தம்: ஆணைக்குழு ஆலோசனை

விழுப்புரம், ஜூலை 14: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், ஐந்தாவது பாடத்திட்ட ஆலோசனை ஆணைக்குழுக் கூட்டம் சனிக்கிழமை தொடங்கியது.

வணிக மேலாண்மை துறைத் தலைவர் பேராசிரியர் ஏ.வி.அருணாகுமார் வரவேற்றார். கல்லூரியின் இயக்குநர் முனைவர் த.கஸ்தூரிபாய் முன்னிலை வகித்தார். திருவள்ளுவர் பல்கலைக் கழக விலங்கியல் துறைத் தலைவர் சிங்காரவேலு, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி வேதியியல் பேராசிரியர் சேகர், கணிதத்துறை பேராசிரியர் எம்.சித்ரா, எத்திராஜ் கல்லூரி ஆங்கிலத் துறைத் தலைவர் பத்மினி உள்ளிட்ட பலர் இக் கூட்டத்தில் பங்கேற்றனர். செயலர் செந்தில்குமார், கல்லூரியின் வளர்ச்சி குறித்து விளக்கிப் பேசினார்.

தேர்வுக்கட்டுப்பாட்டு அதிகாரி பி.நடேசன் தேர்ச்சி குறித்து பேசினார். இக் கூட்டத்தில் பாடத்திட்டத்தில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. உலகமயமாக்கல் கல்வி, இயற்பியல் பாடத்தில் தகவல் தொடர்பான கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பது உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. உயிர்வேதியில் துறைத் தலைவர் அருள்நங்கை நன்றி கூறினார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பாடத்திட்ட ஆலோசனை ஆணைக்குழுக் கூட்டத்தில் பேசுகிறார் இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன்(இடது).

தினமணி 15-07-13




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த பட்டமளிப்புவிழாவில் பெங்களூர் சமூக மற்றும் பொருளாதார ஆராய்ச்சிநிறுவன இயக்குநர் தேஷ்பாண்டே மாணவிகளுக்கு பட்டம் வழங்கினார். அருகில் கல்லூரி செயலாளர் செந்தில்குமார், இயக்குநர் கஸ்தூரிபாய்.

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் 13ம் ஆண்டு பட்டமளிப்பு விழா

விழுப்புரம், ஜூலை 22: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் 13ம் ஆண்டு பட்டம் வழங்கும் விழா நேற்று நடந்தது.

கல்லூரி செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். இயக்குனர் கஸ்தூரிபாய்தனசேகரன் வரவேற்றார். பெங்களூரு சமூக மற்றும் பொருளாதார மாற்று ஆராய்ச்சி மைய இயக்குனர் தேஷ்பாண்டே சிறப்புரையாற்றுகையில், பட்டம் பெறும் மாணவிகளின் தோள்களில் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த பொறுப்புகளை திறமையாக எதிர்கொண்டு தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்றார்.

இதைத்தொடர்ந்து இளங்கலை தமிழில் 23 பேர், முதுகலை தமிழில் 10 பேர், இளங்கலை ஆங்கிலத்தில் 127 பேர், முதுகலை ஆங்கிலத்தில் 4 பேர், பிபிஏவில் 45 பேர், எம்பிஏவில் 6 பேர், பி.காமில் 52 பேர், எம்.காமில் 8 பேர், பொருளாதாரத்தில் 18 பேர், உயிரி வேதியியலில் 35 பேர், பிஎஸ்சி வேதியியலில் 38 பேர், பிஎஸ்சி இயற்பியலில் 34 பேர், பிஎஸ்சி கணிதத்தில் 128 பேர், எம்எஸ்சி கணிதத்தில் 9 பேர், பிஎஸ்சி கணினி அறிவியலில் 70 பேர், எம்.பில் படிப்பில் 49 பேர் என்று மொத்தம் 765 பேருக்கு பட்டங்களை வழங்கி தேஷ்பாண்டே பாராட்டினார்.

சிறந்த மாணவிக்கான விருது உட்பட 5விருதுகளை எம்எஸ்சி கணித மாணவி சவிதா பெற்றார். அவருக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் ரூ.1000 ரொக்க பரிசு வழங்கப்பட்டது.

இதேபோல் பிபிஏ மாணவி விசாலாட்சிக்கும் ரொக்க பரிசாக ரூ.1000ம் வழங்கப்பட்டது. மாணவியர் புல முதன்மையர் சவுந்தரராஜன், ஏழுமலை தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் மேஜர் அகோரம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தினகரன்
22-07-13



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் மாணவர் பேரவை துவக்க விழாவில் சிறப்பு விருந்தினர் சவரிமுத்து குத்து விளக்கு ஏற்றினார். அருகில் கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன்.

# மாணவர் பேரவை துவக்க விழா

விழுப்புரம், ஜூலை 25: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவர் பேரவை தொடக்க விழா நடந்தது. மாணவியர் புல முதன்மையர் சவுந்திரராஜன் வரவேற்றார். இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் நோக்கவுரை ஆற்றினார். மாணவர் பேரவை தலைவர் யூஜினி மாணவர் பேரவையின் ஆண்டு திட்டத்தை வாசித்தார். சேவை குழு தலைவர் நிவேதா துறை குழுவின் ஆண்டு திட்டத்தை வாசித்தார்.

சேவை குழு, நுண்கலை குழுவின் ஆண்டு திட்டத்தை ஹிந்துஜா வாசித்தார். உடற்கல்வி குழுவின் ஆண்டு திட்டத்தை தேவகி வாசித்தார். விடுதியின் ஆண்டு திட்டத்தை விடுதி செயலாளர் லட்சுமி வாசித்தார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திருச்சி புனித ஜோசப் கல்லூரியின் மனித வள மேலாண்மை துறை புல முதன்மையர் சவரிமுத்து முன்னிலை வகித்து பேசுகையில் "பெண் கல்விக்கு முதன்மை அளிக்கும் நிர்வாகத்தை பாராட்டுகிறேன். மாணவிகள் அனைவரும் சிக்கலை தீர்க்கும் திறன், பாராட்டும் திறன், குறிக்கோளை உருவாக்கும் திறன், முடிவு எடுக்கும் திறன், தகவல் தொடர்பு திறன் ஆகியவற்றை வளர்த்து கொள்ள வேண்டும். குறிப்பாக, மாணவியரின் வாழ்வில் ஏற்படும் சிக்கல்கலை முடிந்தவரை பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

மாணவர் பேரவையின் துறை தலைவர் ருத்ரா நன்றி கூறினார்.

தினகரன்

25-07-2013

விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவிகள் பேரவை தொடக்க விழா

விழுப்புரம்,ஜூலை.29-
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவிகள் பேரவை தொடக்க விழா நடந்தது.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த மாணவிகள் பேரவை தொடக்க விழாவில் திருச்சி பேராசிரியர் டாக்டர் சவரிமுத்து குத்துவிளக்கேற்றியபோது எடுத்த படம். அருகில் கல்லூரி இயக்குனர் டாக்டர் கஸ்தூரிபாய்தனசேகரன் உள்ளார்.

## மாணவிகள் பேரவை தொடக்க விழா

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவிகள் பேரவை தொடக்க விழா நடைபெற்றது.

இந்த விழாவிற்கு கல்லூரி இயக்குனர் டாக்டர் கஸ்தூரிபாய் தனசேகரன் தலைமை தாங்கினார். இதில் சிறப்பு விருந்தினராக திருச்சி புனித ஜோசப் கல்லூரி மனித வள மேலாண்மை துறை புல முதன்மையரும், இணை பேராசிரியருமான டாக்டர் சவரிமுத்து கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசுகையில் கூறியதாவது:-

## தகவல் தொடர்பு திறன்

பேரவை தலைவர்களாக பொறுப்பேற்றுள்ளவர்கள் மற்ற மாணவிகளுக்கு முன்மாதிரியாக செயல்பட வேண்டும். ஊக்கப்படுத்தும் திறன், சிக்கலை தீர்க்கும் திறன், பாராட்டும் திறன், குறிக்கோளை உருவாக்கும் திறன், முடிவெடுக்கும் திறன், தகவல் தொடர்பு திறன் ஆகியவற்றை மாணவிகள் வளர்த்துக்கொள்ள வேண்டும். மாணவிகள் வாழ்வில்ஏற்படும்சிக்கல்களை பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

முன்னதாக மாணவர் பேரவை தலைவர் யூஜினி ஆண்டு திட்ட அறிக்கையையும், நிவேதா துறை குழுவின் ஆண்டு திட்டத்தையும், இந்துஜா கலைக்குழுவின் ஆண்டுதிட்ட அறிக்கையையும், தேவகி உடற்கல்வி குழுவின் ஆண்டு திட்டத்தையும், விடுதி செயலாளர் லட்சுமி விடுதி ஆண்டுதிட்ட அறிக்கையையும் வாசித்தனர்.

விழாவில் கல்லூரி புல முதன்மையர் சவுந்தர ராஜன், மாணவர் பேரவையின் துணை தலைவர் ருத்ரா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி மாணவிகள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி 29/07/13

# தெய்வானை அம்மாள் கல்லூரி சேவை குழுக்கள் தொடக்க விழா

விழுப்புரம், ஜூலை 28: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி சேவை குழுக்களின் துவக்க விழா நடந்தது. முனைவர் கலைச்செல்வி வரவேற்றார். மாணவ புலமுதன்மையர் சவுந்திரராஜன் பேசுகையில், மாணவிகள் சேவை செயல்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் சமூக சிக்கல்களை பற்றிய விழிப்புணர்வும், சேவை மனப்பான்மையும் உண்டாகும் என பேசினார்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்தசேவைக்குழுக்களின் துவக்க விழாவில் தோமினிக் சாவியோ பேசினார். அருகில் கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன்.

சேவை குழுக்களின் செயலாளர் இந்துஜா கல்லூரியில் செயல்பட்டு கொண்டிருக்கும் 10 சேவை குழுக்களின் ஆண்டு திட்டங்களை வாசித்தார்.

இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் தலைமை தாங்கி பேசுகையில், கல்லூரியின் அனைத்து சேவை குழுக்களின் செயல்பாடுகளும் பல்கலைக்கழக பாடத்திட்டத்துடன் இணைந்தது. சேவை குழுக்களின் மூலம் பெண்களுக்கான சமூக சிக்கல்களுக்கு தீர்வு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மாணவிகள் அன்னை தெரசா, முத்துலட்சுமி போன்ற சமூக சேவகிகளாக உருவாக வேண்டும் என கூறினார்.

சிறப்பு விருந்தினராக சமூக சேவகர் தோமினிக் சாவியோ பேசுகையில், சேவை என்பது ஒருவர் உள்ளத்திலிருந்து இயல்பாக வரவேண்டும். எதிர்பார்ப்பு எதுவும் இன்றி செய்வதே சிறந்த சேவையாகும் என கூறினார். சாலினி நன்றி கூறினார்.

தினகரன் 29/07/13

# பெண்களுக்கான கபடிப் போட்டி விழுப்புரம் கல்லூரி முதலிடம்

ஸ்ரீமுஷ்ணம், ஆக. 18-

ஸ்ரீமுஷ்ணத்தில் நடந்த கல்லூரிகளுக்கிடையே யான பெண்கள் கபடிப் போட்டியில் விழுப்புரம் தெய்வானை மகளிர் கல்லூரி முதலிடம் பிடித்தது.

கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திற்குட்பட்ட அரசு மற்றும் சுய நிதி கல்லூரிகளுக்கான பெண்கள் கபடிப் போட்டி ஸ்ரீமுஷ்ணம் பி.பி.ஜெ., கல்லூரியில் நடந்தது.

திருவள்ளுவர் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் கவாஸ்கர் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் ரங்கசாமி வரவேற்றார். பி.பி.ஜெ., கல்லூரி செயலர் பிரகாஷ் துவக்கி வைத்தார். போட்டியில் 15 அணியினர் பங்கேற்றனர்.

இறுதிப் போட்டியில் விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி அணியினர் முதலிடமும், கடலூர் கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி அணியினர் இரண்டாமிடமும் பெற்றனர். வெற்றி பெற்ற அணியினருக்கு சான்றிதழ் மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. பி.பி.ஜெ., கல்லூரி பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள், உடற்கல்வி உதவி பேராசிரியர்கள் ராஜேஷ், பரமேஸ்வரி ஆகியோர் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.



ஸ்ரீமுஷ்ணத்தில் நடந்த பெண்கள் கபடி போட்டியில் வெற்றிப்பெற்ற விழுப்புரம் தெய்வாணை அம்மாள் மகளிர் கல்லூரி அணிக்கு கோப்பை வழங்கப்பட்டது.

18/08/13

**Don't quit after one software company interview**

The personal interviews conducted by multinational software industries are more impressive when compared to other interviews. The IT companies generally recruit engineering and computer application students who are technically sound in their professional subjects and have a good command over communication skills. The interview includes aptitude test, group discussion, technical test and personal interview, designed to assess the suitability of a candidate for a career in the software profession. Normally the interviews provide a limited scope to judge a person in different aspects that go into the making of a successful career in the software field. But to ace the interview, a student should possess mental calibre, critical power of assimilation, mental alertness, capacity for clear and logical exposition, leadership skills and moral integrity. In addition to all these qualities, a student should be very confident and face the interview panel boldly, avoiding all signs of nervousness. Even if students get poor marks in the interview and are not selected, they must realise it does not matter much as they can work on improving themselves in areas where they have failed to shine. Failing in an interview is not the end of life. They should attend the next interview with greater enthusiasm and knowledge since they are bound to do much better. Their efforts will not go in vain as there is a suitable job for every candidate in this most competitive computer field.

V. Joseph Emmanuvel,
Assistant Professor,
Theivanai Ammal College for Women,
Villuppuram District.

*Readers can e-mail their letters to pondy.thehindu@gmail.com or write to The Hindu, No. 135, First Floor, Mission Street, Puducherry 605001.*

THE HINDU
19/08/13

16 • தினகரன் • புதுச்சேரி 22.8.2013



▶ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி வணிக மேலாண்மை துறை சார்பில் நடந்த இளம் பிரதிநிதி பேரவை துவக்க விழாவில் செயலாளர் செந்தில்குமார் பேசினார்.

### தெய்வானை அம்மாள் கல்லூரியில்

# இளம் பிரதிநிதி பேரவை துவக்கம்

விழுப்புரம், ஆக. 22: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி வணிக மேலாண்மை துறை சார்பில் இளம் பிரதிநிதி பேரவை துவக்க விழா கல்லூரி கலையரங்கில் நடந்தது. இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன், கல்லூரி செயலாளர் செந்தில்குமார் மற்றும் வணிக மேலாண்மை துறையின் தலைவி அருணாகுமாரி ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி விழாவை துவக்கி வைத்தனர். சிறப்பு விருந்தினராக செயின்ட் ஜோசப் கல்லூரி பேராசிரியர் ஜான் கலந்து கொண்டு மாணவிகள் வாழ்க்கையில் முன்னேறுவதற்காக தன்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். இதன்மூலம் நல்ல கருத்துகளையும், சுய வளர்ச்சிக்கான முக்கியத்துவங்களையும் மாணவிகள் அறிந்து கொண்டனர். மாணவிகள் தங்கள் குறிக்கோள்களையும், அவர்கள் சாதிக்க விரும்புவதையும் விளக்கினார்கள். பின்பு, கல்லூரி மாணவிகள் உலக மையமாக்குதலின் மேலாண்மையின் பங்கு என்னும் தலைப்பில் போஸ்டர் பிரசென்டேஷன் செய்து விளக்கினர்.

தினகரன் 22*08*13

# Inspiring children to pursue career in basic sciences

A.V. Ragunathan

**VILLUPURAM:** The five-day 'Inspire Science Camp' sponsored by the Department of Science and Technology got off to a colourful start at Theivanai Ammal College for Women here on Tuesday.

As many as 160 top scorers in the Class X board examinations, including equal number of boys and girls, drawn from 18 schools are attending the camp.

In his inaugural address, M. Lakshmanan, Professor of Eminence, Centre for Nonlinear Dynamics, Bharathidasan University, Tiruchi, said the objective of the programme was to attract talent to science and build critical human resource pool for strengthening and expanding the science and technology system and research base.

A total number of one lakh meritorious students who had passed out of Class X with 94.2 per cent of marks would attend the Inspire programme across the country this year. For the purpose, the Centre had earmarked Rs. 2,000 crore in the current Five-Year-Plan.

He said that India and China were emerging as front ranking economic powers in the world. "Perhaps by 2040-2050 India will overtake China on the strength of its vibrant democracy and larger youth population. Therefore, it has started investing on the youth through programmes like Inspire," he said.

District Collector V. Sampath said that the Inspire programme would be a boon to the students as they were eligible for Scholarships for Higher Education (SHE) besides research grant.

College chairman E. Swamikannu, secretary S. Senthil Kumar and director Kasturibai Dhanasekaran participated. The day at the camp would begin with yoga and mediation after which the students would get a wide exposure to the basic and applied sciences through the lectures of eminent academicians.

Besides attending practical scientific sessions, they would also participate in drawing competition and poster presentation.



M. Lakshmanan, Professor of Eminence, Centre for Nonlinear Dynamics, Bharathidasan University, Tiruchi, speaking at Theivanai Ammal College for Women in Villupuram on Tuesday. – PHOTO: G. KRISHNASWAMY

THE HINDU 28*08*2013

**மாவட்டம்**

## தெய்வானை அம்மாள் கல்லூரியில்

# அறிவியல் ஆராய்ச்சி திறன் ஊக்குவித்தல் பயிற்சி முகாம்

### கலெக்டர் சம்பத் துவக்கி வைத்தார்



▶ விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தொடங்கிய அறிவியல் ஆராய்ச்சி திறன் ஊக்குவிக்கும் பயிற்சி முகாமை மாவட்ட ஆட்சியர் சம்பத் குத்துவிளக் கேற்றி துவக்கிவைத்தார். அருகில் கல்லூரி தாளாளர் சாமிக் கண்ணு, செயலர் செந்தில்குமார்.

விழுப்புரம், ஆக. 28: அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகம், அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறை, தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி சார்பில் அறிவியல் ஆராய்ச்சி திறனை ஊக்கு வித்தல் பயிற்சி முகாம் நேற்று துவங்கியது. 5 நாட்கள் நடக்கும் பயிற்சி முகாம் தொடக்க விழாவுக்கு சேர்மன் சாமிக்கண்ணு தலைமை தாங்கினார். இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் முன்னிலை வகித்தார். செயலாளர் செந் தில்குமார் வரவேற்றார். பயிற்சி முகாமை துவக்கி வைத்து கலெக்டர் சம்பத் பேசியதாவது: கிராமப்புற பெண்களின் உயர்கல்வி வளர்ச்சிக்கு இக்கல்லூரி முக்கிய பங்காற்றுகின்றது. அதேநேரத்தில் தரமான கல்வியையும் வழங்கி வரு கின்றது. மத்திய அரசின் 20-20 விஷன் என்ற இலக்கை அடைய அறி வியல் ஆராய்ச்சி திறனை ஊக்குவித்தல் பயிற்சி முகாம் உதவும். இவ்வாறு அவர் பேசினார். திருச்சி பாரதிதாசன் பல்கலை கழக பேராசிரியர் முனைவர் லட் சுமணன், பயிற்சி முகாம் ஒருங்கிணைப்பாளர் பேரா சிரியர் செல்வி, துணை ஒருங்கிணைப்பாளர் பேரா சிரியர் அருள் நங்கை உட்பட பலர் கலந்துகொண் டனர். பயிற்சி முகாமில் 150 மாணவ, மாணவிகள் பங் கேற்றுள்ளனர்.

தினகரன் 28.08.2013



**மாவட்டம்**



▶ விழுப்புரத்தில் நடந்த மகளிர் கூடைப்பந்து போட்டியில் முதலிடத்தை பிடித்த தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரிக்கு கல்லூரியின் செயலர் செந்தில்குமார் பரிசு கோப்பையை வழங்கினார்.


# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கூடைப்பந்து போட்டி

புதுச்சேரி, செப். 6: திருவள் ளுவர் பல்கலைக்கழக மண் டலங்களுக்கு இடையே யான மகளிர் கூடைப்பந்து போட்டி விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந் தது.

கல்லூரியின் செயலர் செந்தில்குமார், கடலூர் மண்டல ஆண்கள், பெண் கள் பிரிவின் ஒருங்கிணைப் பாளர் கவாஸ்கார் ஆகி யோர் தலைமை தாங்கினர். இப்போட்டியில் விழுப் புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி முதலிடத் தையும், புனிதவளனார் கல்லூரி 2ம் இடத்தையும் பிடித்தது.

வெற்றி பெற்ற அணி யினருக்கு கோப்பை, சான் றிதழ்களை கல்லூரியின் செயலர், இயக்குனர், முதல்வர் ஆகியோர் வழங் கினர். உடற்கல்வி இயக் குனர் தமிழரசி நன்றி கூறி னார்.

தினகரன் 06.09.2013




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த விழாவில் கலெக்டர் சம்பத் பேசிய போது எடுத்த படம். அருகில் கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு, செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

### ஆராய்ச்சி திறனை ஊக்குவித்தல் பயிற்சி

# அறிவியல் விஞ்ஞானிகளை உருவாக்கும் அடித்தளமாகும்

## கலெக்டர் சம்பத் பேச்சு

விழுப்புரம், ஆக.28-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நடந்த ஆராய்ச்சி ஊக்குவித்தல் பயிற்சி முகாமில், அறிவியல் விஞ்ஞானிகளை உருவாக்க அடித்தளமாகும் என்று கலெக்டர் சம்பத் தெரிவித் தார்.

### அறிவியல் ஊக்குவித்தல் பயிற்சி முகாம்

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில், மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறையுடன்இணைந்து வருகிற 31-ந் தேதி வரை 5 நாட்கள் பள்ளி மாணவர் களுக்கான அறிவியல் ஆராய்ச்சி திறனை ஊக்கு வித்தல் பயிற்சி முகாமை நடத்துகிறது.

இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி தாளாளர் கல்வியாளர் சாமிக் கண்ணு தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் கலெக்டர் சம்பத் கலந்து கொண்டு, முகாமை தொடங்கி வைத்து பேசினார்.

அப்போது அவர் கூறிய தாவது:-

### படிப்பு வலுசேர்க்கும்

மத்திய தொழில்நுட்பக அமைச் சகம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துடன் இணைந்து, மாண வர்களுக் கான அறிவியல் ஆராய்ச்சி திறனை ஊக்குவித்தல் பயிற்சி முகாமை நடத்துவது மத்திய அரசின் 20 -20 திட்ட இலக்கை அடையும் வகையில் உள்ளது.

இந்த முகாம்கள், தொழில் நுட்ப வளர்ச்சி, ஆராய்ச்சி படிப்பு களுக்கு வலுசேர்க்கும். மேலும் வேதியல், இயற்பி யல், கணிதம் போன்ற பாடங்களில் அதிக அளவில் திறமைகளை வளர்த்து கொள்ளமுடியும். இந்த முகாம் விழுப்புரம் மாவட்ட மாணவர்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பு ஆகும்.

### விஞ்ஞானியாக்க அடித்தளம்

முகாமில் கலந்து கொண்டுள்ள மாணவர்கள் இந்த பயிற்சியில் அறிந்து கொண்டதை சக மாண வர்களுடன் கலந்துரையாட வேண்டும். அறிவியல் சார்ந்த படிப்புக்கு இந்த பயிற்சி உறுது ணையாக இருக்கும். மாணவர் கள் எதிர்காலத்தில் விஞ் ஞானி களாக உருவாவதற்கு இந்த பயிற்சி முகாம் ஒரு அடித்தளமாகும்.

மாணவர்கள் தினமும் ½ மணி நேரம் பிரார்த்தனை செய்ய வேண்டும். விடா முயற்சி,கடின உழைப்பு, 1 மணி நேரம் விளை யாட்டில் ஈடுபடுத்திக் கொள்ள வேண் டும். மாணவர் களுக்கு உடல் தகுதியும், மனவலி மையும் இருந்தால் எதையும் சாதிக் கலாம்.

வருங்காலத்தில் தமிழக, இந்திய அளவில் மட்டும் அல்லாது உலக அளவில் சிறந்த விஞ்ஞானியாக நீங்கள் வரவேண்டும்.

இவ்வாறு கலெக்டர் சம்பத் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் செந்தில்குமார், திருச்சி பாரதிதாசன் பல் கலைக் கழக பேராசிரியர் டாக்டர் லட்சுமணன், மதுரை காம ராஜர் பல்கலைக்கழக பேரா சிரியர் பாண்டியன், கல்லூரி இயக்கு நர் டாக்டர் கஸ்தூரிபாய் தன சேகரன், பேராசிரியர்கள் அருள் நங்கை ,செல்வி உள்பட பலர் கலந்து கொண்டு பேசினார் கள்.

இந்த மாணவர்களுக்கான அறிவியல் ஆராய்ச்சிதிறனை ஊக்குவித்தல் பயிற்சி முகா மில் கடலூர், விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த 10-ம் வகுப்பில் 470 மதிப் பெண்ணுக்கு மேல் பெற்ற 150 மாணவர்கள் கலந்து கொண் டனர்.

தினத்தந்தி 28-08-13

18 • தினகரன் • புதுச்சேரி 7.9.2013

மாவட்டம்




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆசிரியர் தின விழா நடந்தது.

விழுப்புரம்

## தெய்வானை அம்மாள் கல்லூரியில் ஆசிரியர் தினவிழா

விழுப்புரம், செப். 7: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ஆசிரியர் தின விழா நடந்தது. மாணவி ஸ்ரீதேவி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினர் கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு, செயலர் செந்தில்குமார் ஆகியோருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. முதுநிலை பேராசிரியர் சாந்தி, புல முதன்மையர் சவுந்தர்ராஜன், கல்லூரி முதல்வர் நடேசன் ஆகியோர் பேசினர். கல்லூரி செயலர் செந்தில்குமார் தாளாளரின் பெருமைகள் குறித்து எடுத்துக் கூறினார். மேலும் கல்லூரியின் வளர்ச்சிக்கு காரணமான இயக்குனர், முதல்வர், புல முன்மையர், பேராசிரியர்களையும் பாராட்டினார்.

கல்லூரி தாளாளர் பேசுகையில், கல்விப்பணியில் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் ஆசிரியர்கள் தான் பிற்காலத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன் போல் மிளிர முடியும் என்றார். மாணவி பிரியதர்ஷினி நன்றி கூறினார்.

தினகரன் 7.9.2013

விழுப்புரத்தில் நடைபெற்ற

## 13 ம் ஆண்டு தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா

ஜூலை, 25 720 மாணவ, மாணவிகளுக்கு பட்டமளிப்பு கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவுக்கு தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி செயலாளரும் இ.எஸ். மியூசிக் அகடாமி செயலாளருமான இ.எஸ்.செந்தில்குமார் தலைமை தாங்கி கல்லூரியின் இயக்குனர் டாக்டர் கஸ்தூரிபாய், தனசேகர்.முன்னிலை வகித்தனர். இதில் பெங்களூர் சமூகம் மற்றும் பொருளாதார மற்றும் ஆராய்ச்சி மைய இயக்குனர் டாக்டர் ஆர்.எஸ் தேஷ்பாண்டே கலந்து கொண்டு கல்லூரியில், தமிழ், ஆங்கிலம், வணிக, மேலாண்மை, வணிகவியல் பொருளாதாரம், நுண்வேதியல் இயற்பியம், கணிதவியல், கணினிஅறிவியல், எம்.பிஎல் ஆகிய துரைகளில் பணியாற்றி வெற்றி பெற்ற 720 மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி உறையாற்றும் போது மாணவ, மாணவிகளுக்கு ஒரு வேண்டுகோள் கூறினார். குறிக்கோளுடன் செயல்பட வேண்டும். வாழவேண்டும். வித்தியாசமாக சிந்தித்து செயல்பட வேண்டும். இன்றைக்கும் இதுபோன்ற வேலைக்கும் செல்வீர்கள் என்றால் போலிஸ் இன்றும் பல்வேறு துறையில் உள்ள வேலைக்கும் செல்வோம் என்று கூறுவீர்கள் . ஆனால் உங்களின் பெற்றோர்களிடம் கேட்டால் டாக்டர் ஆக்கவேண்டும், இன்ஜினியர் ஆக்க வேண்டும் என்று கூறுவார்கள். உங்களுடைய எதிர்பார்ப்புகள் உற்சாகமாக இருக்க வேண்டும் ஒரு முடிவு எடுப்பதற்கு முன் சாதனை பலமுறை யோசித்து எடுத்தோம் என்றால் அது நன்றாக இருக்கும். தவறு செய்தோம் என்றால் அதை திருத்திக் கொண்டு செயல்பட வேண்டும் மனதை அலைபாயக் கூடாது. சாதனை வல்லமை படைத்தவர்கள் வல்லமை படைத்தவர்கள் நீங்கள் ஒரு முடிவை எடுத்து விட்டால் அதனை செயல்படுத்தும் வரை முன் வைத்த காலை பின் வைக்க கூடாது. கால நேரத்தை வீணடிக்காமல் தொழில் நுட்ப துறையில் மாணவ, மாணவிகள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். நாடு , கரடு முரடான பாதையில் சென்றாலும் நீங்கள் முன்னேற்ற பாதையில் திட்டமிடுதல் வேணடும். திட்டமிட்டு செயல்பட்டால் வெற்றி கிடைக்கும் இவ்வாறு டாக்டர் பாண்டே பேசினார். விழாவில் கல்லூரி தேர்வு கட்டுப்பாட்டாளர் நடேசன் , கல்லூரி டீன் சுந்தரராஜன், ஏழுமலை பாலிடெக்னிக் முதல்வர் அசுகேரம் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

* ஷில் முரசு
26. 07 .2013



கடலூர் கிருஷ்ணசாமி கல்லூரியில் நடந்த பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகளை கல்லூரி பேராசிரியர்கள் பாராட்டினர்.

* தினகரன்
14-09-2013

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் ரத்ததான முகாம்

விழுப்புரம், அக். 28: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் செஞ்சிலுவை சங்க சேவை குழுவின் சார்பில் ரத்ததான முகாம் நடந்தது. கல்லூரி செயலர் செந்தில்குமார் தொடங்கி வைத்தார். சேவைக்குழு உறுப்பினர் பிரேமா வரவேற்றார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் நோக்க உரையாற்றினார். சிறப்பு விருந்தினர்கள் செஞ்சிலுவை சங்க இயக்குனர் பாலதண்டாயுதம், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி அதிகாரி தமிழ்மணி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். செஞ்சிலுவை சங்க சேவைக்குழு ஒருங்கிணைப்பாளர் ஜெமிலா ஜெயந்தி நன்றி கூறினார். முகாமில் 120 மாணவிகள் ரத்ததானம் செய்தனர்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் செயலர் செந்தில்குமார் தலைமையில் ரத்ததான முகாம் நடந்தது.



விழுப்புரம் ஜெயந்தி சரஸ்வதி மெட்ரிக்குலேசன் பள்ளியில் நடந்த விளையாட்டு தினவிழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இ.எஸ்.கல்வி குழும செயலாளர் செந்தில்குமார் பரிசு வழங்கினார். அருகில் மகாலட்சுமி குரூப்ஸ் உரிமையாளர் ரமேஷ்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த மாநில அளவிலான கருத்தரங்கில் கல்லூரி செயலர் செந்தில்குமார் பேசினார்.

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் பங்குசந்தை குறித்து கருத்தரங்கம்

விழுப்புரம், செப். 25: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வணிகவியல்துறை சார்பில் பங்குசந்தையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த மாநில அளவிலான கருத்தரங்கம் தொடங்கியது. வணிகவியல் துறைத் தலைவர் முனைவர் செல்வகுமார் வரவேற்றார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் அறிமுக உரை ஆற்றினார். கல்லூரி செயலர் செந்தில்குமார் பங்குச்சந்தை மற்றும் அன்னிய செலாவணி சந்தையில் ஏற்படும் மாற்றங்கள் பாடத்திட்டங்களில் பிரதிபலிக்க வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தார். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக வணிகவியல் பேராசிரியர், முனைவர் பாலச்சந்திரன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். உதவிபேராசிரியர் ஆனந்தி நன்றி கூறினார். விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த பிற கல்லூரி மாணவ, மாணவிகள், விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர்.

# தெய்வானை கல்லூரியில் மாநில அளவில் கருத்தரங்கு

விழுப்புரம், செப். 22-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வணிகவியல் மற்றும் பொருளாதார துறை சார்பில் மாநில கருத்தரங்கம் நடந்தது.

கல்லூரி இயக்குனர் கஸ்துாரிபாய் தனசேகரன் தலைமை தாங்கினார். செயலாளர் செந்தில் குமார் முன்னிலை வகித்தார்.

வணிகவியல் துறை தலைவர் செல்வகுமார் வரவேற்றார். காரைக்குடி அழகப்பா பகல்லைக்கழகம் வணிகவியல் துறை பேராசிரியர் பாலச்சந்திரன் நிதித்துறையில் உள்ள பங்கு சந்தை, அன்னிய செலவாணியில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி சிறப்புரையாற்றினார்.

பிற கல்லூரிகளை சேர்ந்த மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். உதவி பேராசிரியை ஆனந்தி நன்றி கூறினார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த நிர்வாகக்குழு கூட்டத்தில் இயக்குநர் கஸ்துாரிபாய் தனசேகரன் பேசினார். அருகில் தாளாளர் சாமிக்கண்ணு.

## மகளிர் கல்லூரியில் நிர்வாகக்குழு கூட்டம்

விழுப்புரம், அக். 29-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி கருத்தரங்க கூடத்தில் நான்காவது நிர்வாகக் குழு கூட்டம் நடந்தது.

தாளாளர் சாமிக்கண்ணு தலைமை தாங்கினார். புல முதன்மையர் சவுந்திரராஜன் வரவேற்றார். செயலாளர் செந்தில்குமார் அறிமுக உரையாற்றினார். இயக்குனர் கஸ்துாரிபாய் தனசேகரன், இந்தாண்டிற்கான கல்லூரியின் முக்கிய நிகழ்வுகள் பற்றி கூறினார். அருள்நங்கை நன்றி கூறினார்.

தினமலர் 29.10.2013

தினமலர் 01.11.13



விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில் விவேகானந்தர் சிலையை சுவாமி அகஷ்ராத்மானந்தர் திறந்து வைத்தார். அருகில் கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு, செயலாளர் செந்தில்குமார்.

## சுவாமி விவேகானந்தர் சிலை திறப்பு விழா

விழுப்புரம், நவ. 1-

சுவாமி விவேகானந்தர் 150வது பிறந்த ஆண்டு விழாவையொட்டி விழுப்புரத்தில் விவேகானந்தர் சிலை திறப்பு விழா நடந்தது.

விழுப்புரம் ஏழுமலை பாலிடெக்னிக் கல்லூரிக்கு வந்த சுவாமி விவேகானந்தர் ரதத்திற்கு மாணவ, மாணவிகள் பூரண கும்ப மரியாதை வரவேற்பு அளித்து தீபாராதனை காட்டி வணங்கினர். தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த சிலை திறப்பு விழா நிகழ்ச்சிக்கு தாளாளர் சாமிக்கண்ணு தலைமை தாங்கினார். இயக்குனர் கஸ்துாரிபாய் தனசேகரன், செயலாளர் செந்தில்குமார், ராமகிருஷ்ணா பள்ளி செயலாளர் பழனிவேல், முதல்வர் பாட்ஷா முன்னிலை வகித்தனர்.

விவேகானந்தர் திருவுருவ சிலையை சுவாமி அஷ்ராத்மானந்தர் திறந்து வைத்தார். விவேகானந்தரின் சொற்பொழிவுகளை சுவாமி ஹரிவிரதானந்தர் உறுதிமொழியாக வாசிக்க, மாணவிகள் ஏற்றனர். கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணுவிற்கு, விவேகானந்தர் புத்தகத்தை சுவாமி தர்மாத்மானந்தர் நினைவு பரிசாக வழங்கினார்.

துறை பேராசிரியைகள், மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர். பொருளாதார துறை தலைவி சாந்தி நன்றி கூறினார்.

தினகரன் 01-11-13

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் விவேகானந்தர் பிறந்தநாள் விழா

புதுச்சேரி, நவ. 1: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் விவேகானந்தரின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. புல முதன்மையர் சவுந்தரராஜன் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சுவாமி அக்ஷராத்மானந்தருக்கு கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கினார். தொடர்ந்து சுவாமி ஹரிவிரதானந்தருக்கு செயலர் செந்தில்குமார் பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கினார்.

பின்னர் சிறப்பு விருந்தினர் விவேகானந்தரின் சிலையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன், செயலர் செந்தில்குமார் ஆகியோர் விவேகானந்தர் குறித்து பேசினர்.

கல்லூரிக்கு வந்த விவேகானந்தர் ரதத்திற்கு மாலை அணிவித்து பூஜை செய்யப்பட்டு உறுதி மொழி எடுக்கப்பட்டது. கல்லூரியின் தாளாளர் சாமிக்கண்ணு விவேகானந்தர் வாழ்க்கை வரலாறு குறித்து பேசினார். பொருளாதாரத்துறை தலைவர் சாந்தி நன்றி கூறினார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த விவேகானந்தரின் பிறந்தநாள் விழாவில் சுவாமி அக்ஷராத்மானந்தருக்கு கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு நினைவு பரிசு வழங்கினார். அருகில் கல்லூரி செயலர் செந்தில்குமார்.

தினமலர் 12/10/13



விழுப்புரத்தில் நடந்த பல்கலைக்கழக மண்டல கூடைப்பந்து போட்டியில் முதலிடம் பெற்ற தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி அணிக்கு, டாக்டர் அமுல்தாஸ் சான்றிதழ் வழங்கினார். அருகில் கல்லூரி செயலாளர் செந்தில்குமார், இயக்குனர் கஸ்தூரிபாய்.

# விழுப்புரம் மகளிர் கல்லூரி அணி கூடைப்பந்து போட்டியில் முதலிடம்

விழுப்புரம், அக். 12- பல்கலைக்கழக மண்டல கூடைபந்து போட்டியில் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி முதலிடத்தை பிடித்தது.

அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கு இடையே மகளிர் கூடைப்பந்து போட்டிகள் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் அணியை தேர்வு செய்வதற்காக திருவள்ளுவர் பல்கலைக் கழக மண்டலங்களுக்கு இடையே கூடைப்பந்து போட்டி நடந்தது.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த போட்டிக்கு, கல்லூரியின் செயலாளர் செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

திருவள்ளுவர் பல்கலைக் கழக உடற்கல்வி இயக்குனர் டாக்டர் அமுல்தாஸ் போட்டியை துவக்கி வைத்தார்.

கடலூர் மண்டல ஆண்கள் பிரிவு ஒருங்கிணைப்பாளர் கவாஸ்கர், உடற்கல்வி இயக்குனர் தமிழரசி முன்னிலை வகித்தனர். இதில் வேலூர் வெற்றி மற்றும் மண்டல அணி, கடலூர் வெற்றி மற்றும் மண்டல அணி ஆகிய நான்கு அணிகளுக்கிடையே சுற்றுகள் முறையில் போட்டி நடந்தது.

இதில், விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி அணி முதலிடத்தை வென்றது. கடலூர் மண்டல அணி இரண்டாமிடம், திருவண்ணாமலை அரசு கலை கல்லூரி மூன்றாம் இடத்தை பிடித்தன. வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் பரிசு வழங்கினார். டாக்டர் அமுல்தாஸ் வெற்றி அணிகளுக்கு சான்றிதழ் வழங்கி, பாராட்டினார்.

தினமலர் 12/10/13

16 • தினகரன் • புதுச்சேரி 11.10.2013

மாவட்டம்



திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான கூடைப்பந்து மற்றும் கைப்பந்து போட்டியில் வெற்றிப்பெற்ற தெய்வானையம்மாள் கல்லூரி மாணவிகளுக்கு பல்கலைக்கழகத்தின் இயக்குநர் அமுல்தாஸ் பரிசு வழங்கினார். அருகில் கல்லூரி செயலர் செந்தில்குமார்.

கூடைப்பந்து போட்டி

## தெய்வானை அம்மாள் கல்லூரி ஒன்பது ஆண்டாக முதலிடம்

விழுப்புரம், அக். 11: அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையே நடைபெற உள்ள மகளிர் கூடை பந்து போட்டிகளில் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் சார்பில் விளையாடவுள்ள வீராங்கனை தேர்வு செய்யும் போட்டிகள் விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நடந்தது. உடற்கல்வி இயக்கநர் தமிழரசி வரவேற்றார். திருவள்ளுவர் பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர் அமுல்தாஸ் கூடைப் பந்து போட்டிகளை தொடங்கிவைத்தார்.

போட்டியில் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி அணி முதலிடத்தையும், கடலூர் மண்டல அணி இரண்டாமிடத்தையும், திருவண்ணாமலை அரசு கலைக்கல்லூரி மூன்றாமிடத்தையும் கைப்பற்றியது.

மாலையில் நடந்த பரிசளிப்பு விழாவுக்கு கல்லூரி செயலர் செந்தில்குமார் தலைமை தாங்கினார். உடற்கல்வி இயக்குநர் அமுல் தாசுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டன.

கல்லூரி இயக்குநர் கஸ்தூரிபாய்தனசேகர் பயிற்சியாளருக்கு நினைவுப்பரிசு வழங்கினார். தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி ஒன்பது வருடங்களாக முதலிடத்தை தக்கவைத்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

16 • தினகரன் • புதுச்சேரி 1.12.2013



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் தாளாளர் சாமிக்கண்ணு பேசினார். அருகில் செயலர் செந்தில்குமார், பிரம்மச்சாரினி பிரம்மாஜி.

## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு

விழுப்புரம், டிச. 1: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, ஏழுமலை தொழில் நுட்ப கல்லூரி மற்றும் தேசிய சிந்தனை கழகம் சார்பில் விவேகானந்தரின் 150வது பிறந்த ஆண்டை முன்னிட்டு கல்லூரி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கம் தாளாளர் சாமிகண்ணு தலைமையில் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நடந்தது. மாணவியர் புல முதன்மையர் சவுந்தரராஜன் வரவேற்றார். கல்லூரி செயலர் செந்தில்குமார் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி தாளாளர் சாமிகண்ணு இளைஞர்கள் பின்பற்ற வேண்டிய நல்லொழுக்கம், கடமைகள் போன்றவை குறித்து பேசினார்.

சிறப்பு விருந்தினராக உளுந்தூர்பேட்டை ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி இணை செயலர் பிரம்மச்சாரினி பிரம்மாஜி சங்கராச்சாரியார், விவேகானந்தர், காந்தி ஆகியோரின் வாழ்க்கை குறித்து விளக்கினார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகர், முதல்வர்(பொ) நடேசன், ஏழுமலை தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் அகோரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.



விழுப்புரம் தெய்வானையம்மாள் கல்லூரியில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் சாரதா மகளிர் கல்லூரி இணை செயலாளர் பிரேமா பிரணாமாஜி பேசினார். அருகில் தாளாலர் சாமிகண்ணு.

# கல்லூரி ஆசிரியர்களுக்கு கருத்தரங்கம்

விழுப்புரம், டிச. 1-
விழுப்புரம் தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரியில், ஆசிரியர்களுக்கான கருத்தரங்கம் நடந்தது.

தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரி, ஏழுமலை தொழில்நுட்ப கல்லூரி மற்றும் தேசிய சிந்தனைக் கழகம் சார்பில் சுவாமி விவேகானந்தரின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு, கல்லூரி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கம் நேற்று விழுப்புரத்தில் நடந்தது.

தெய்வானையம்மாள் மகளிர் கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு தலைமை தாங்கினார். மாணவியர் புல முதன்மையர் சவுந்தரராஜன் வரவேற்றார்.

செயலாளர் செந்தில்குமார், இயக்குனர் கஸ்துாரி தனசேகரன், முதல்வர் (பொறுப்பு) நடேசன் வாழ்த்தி பேசினர்.

உளுந்துார்பேட்டை சாரதா மகளிர் கல்லூரி இணைச் செயலாளர் பிரேமா பிரணாமாஜி, தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக் கழக மேலாண்மைத் துறை பேராசிரியர் சீனுவாசன் வாழ்த்தி பேசினர்.

பேராசிரியர் சாந்தி நன்றி கூறினார்.

தினமலர் 01.12.13



### தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில்

# கருத்தரங்கு

விழுப்புரம்,டிச.2–
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, ஏழுமலை தொழில்நுட்ப கல்லூரி மற்றும் தேசிய சிந்தனை கழகம் சார்பில் விவேகானந்தரின் 150–வது பிறந்த ஆண்டை முன்னிட்டு கல்லூரி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கம் தாளாளர் சாமிக்கண்ணு தலைமையில் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நடந்தது. மாணவியர் புல முதன்மையர் சவுந்தரராஜன் வரவேற்றார். கல்லூரி செயலாளர் செந்தில்குமார் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு இளைஞர்கள் பின்பற்ற வேண்டிய நல்லொழுக்கம், கடமைகள் போன்றவை குறித்து பேசினார்.

சிறப்பு விருந்தினராக உளுந்தூர்பேட்டை ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி இணை செயலாளர் பிரம்மச்சாரினி பிரம்மாஜி சங்கராச்சாரியார், விவேகானந்தர், காந்தி ஆகியோரின் வாழ்க்கை குறித்து விளக்கினார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகர், முதல்வர் (பொ) நடேசன், ஏழுமலை தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் அகோரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தினமணி 02.12.13

## திருவள்ளுவர் பல்கலை. கல்விக் குழு உறுப்பினராக விழுப்புரத்தைச் சேர்ந்தவர் நியமனம்

வேலூர், நவ. 28: திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் கல்விக் குழு உறுப்பினராக விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரிச் செயலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்தின் இணைவேந்தரும், உயர் கல்வித் துறை அமைச்சருமான பி.பழனியப்பன் பரிந்துரையின் பேரில், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் கல்விக் குழு உறுப்பினர்களாக வேலூர் மாநகராட்சி மேயர் பி.கார்த்தியாயினி மற்றும் விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரிச் செயலர் எஸ்.செந்தில்குமார் ஆகியோரை அரசு நியமித்துள்ளது. இவர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகள். இவர்கள் இருவரின் நியமனத்தை அடுத்து பல்கலைக்கழகத்தின் கல்விக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 65-ஆக உள்ளது என்று பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி.குணசேகரன் தெரிவித்தார்.

* தினமணி 29.11.2013



**Heartiest Congratulations**

to

**Mr. S.Senthil Kumar,** M.Com.

Secretary,
Theivanai Ammal College
for Women, (Autonomous)
Villupuram.

on his nomination as member of the **Academic Council** of **Thiruvalluvar University, Vellore.**

by the Govt. of Tamil Nadu for a period of three years from 5th November 2013

- Director, Administrative Council Officers, Faculty & Staff

**Historical Achievements**

- Empowerment of Rural Women through Quality Education
- UGC conferment of Autonomous Status
- NAAC Re-accreditation with A Grade
- Visit to Foreign Universities of Singapore & Hong-Kong
- A.P.J. Abdul Kalam's visit for Launching Villupuram 2020
- Founder of E.S.Nursing College, E.S. Music & Sports Academies

THEIVANAI AMMAL COLLEGE FOR WOMEN
(Re-Accredited by NAAC with 'A' Grade & ISO 9001:2008 Certified)

* THE HINDU 7.12.13

### திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக்குழு உறுப்பினராக

## தெய்வானை மகளிர் கல்லூரி செயலர் நியமனம்!

விழுப்புரம், டிச. 9-

திருவள்ளுவர் பல்கலைக்கழக கல்விக் குழு உறுப்பினராகத் தமிழக அரசு சார்பில் இணைவேந்தர், உயர் கல்வித்துறை அமைச்சர் ஆகியோரால் விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி செயலாளர் கல்வியாளர் எஸ்.செந்தில் குமாரை கல்விக்குழு உறுப்பினராக 5.11.2013 முதல் மூன்று ஆண்டுகளுக்கு நியமிக்கப் பட்டுள்ளார். இவர் ஏற்கனவே கல்விக்கு உறுப்பினர் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு 3 ஆண்டுகள் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.



எஸ்.செந்தில் குமார்

### சரித்திரம் படைத்த சாதனைகள்

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் செயலாளராக எஸ்.செந்தில் குமார் பொறுப்பேற்றதும் விழுப்புரம் மாவட்டத்தில் முதன் முதலில் தன்னாட்சி கல்லூரி தகுதி பெறச் செய்தவர். மேல்நாட்டுப்பல்கலைக் கழகக் கல்வி தரத்திற்கு இணையான கல்வி வழங்கும் நோக்கில் லிங்னான் மற்றும் சைனீஸ் -ஹாங்காங், முதலான பல்கலைக்கழக கல்விப் பயணம் மேற்கொண்டு கிராமப்புற பெண்களின் நிலைக்கு ஏற்பவே சர்வதேச தரத்திலான கல்வி அளிக்க ஏற்பாடு செய்தவர் இவர் என்.ஏ.ஏ.சி.-ன் முதல் மதிப்பீட்டில் மூன்றாம் நிலையிலிருந்த கல்லூரியினை இரண்டாம் மதிப்பீட்டில் முதல் நிலைக்கு கொண்டுவந்த பெருமைக்குரியவர் இவர். உலகத்தரத்திலான மாநில மற்றும் தேசிய கருத்தரங்கம் குறிப்பாக என்ஏஏசி தரக்குழுவின் பரிந்துரையில் உயர் கல்வியின் தரமும் சிறப்புமான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தவர். எண்ணற்ற கல்விக் கருத்தரங்குகள் நிகழ முயற்சித்தவர். இந்திரா காந்தி திறந்த நிலைப் பல்கலைக்கழகத்துடன் ஒன்றிணைவுத் திட்டத்தை தொடங்கியவர் இவர்.

செவிலியர் கல்வி பயில சென்னை முதலான மாநகரம் தேடிச்செல்லும் நிலைமாற்றி விழுப்புரம் கிராமத்திற்கே கொணர்ந்து செயலாற்றுபவர். இ.எஸ். இசைப்பள்ளி தொடங்கி அனைவருக்கும் இசைக்கல்வியை எளிதில் பெற வழிச்செய்தவர். விழுப்புரம் இ.எஸ். விளையாட்டு குழுமத்தின் செயலாளராக மட்டுமின்றி, விளையாட்டுத்துறை மாணவியர் அனைவருக்கும் இலவசக் கல்வி, உணவு, உறைவிடம் வழங்கி சிறப்பித்து வருபவர். அவர்களுக்கு பல்வேறு உயர் பணியிடங்களில் பணி வாய்ப்புகள் கிடைக்கச் செய்தவர்.

ஜமாத்து முஸ்லிம் அமைப்பும் மற்றும் சமூக நல அமைப்புடன் இணைந்து விழுப்புரம் 2020 என்ற நிகழ்ச்சியின் மூலம் ஏ.பி.ஜே.அப்துல் கலாமை விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரிக்கு முதன் முதலில் வரவழைத்து பெருமைப் படுத்தியவர் எஸ். செந்தில்குமார்.

### நன்றியுரை

எஸ். செந்தில்குமார் இதன் தொடர்பாக கூறுகையில் தன்னை தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் பல்கலைக் கழகத்தின் கல்விக்குழு உறுப் னராக நியமித்த இணை வேந்தருக்கும், துணைவேந்தருக்கும் கல்லூரி தாளார் கல்வியாளர் இ.சாமிக்கண்ணுவுக்கும், இயக்குநர், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

* மாலை முரசு 9.12.13

# தெய்வானை அம்மாள் கல்லூரி செயலருக்கு பாராட்டு விழா



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி செயலர் செந்தில்குமாருக்கு பேராசிரியர்கள், பணியாளர்களின் சார்பாக வாழ்த்து மடல் வழங்கப்பட்டது. அருகில் தாளாளர் சாமிக்கண்ணு.

விழுப்புரம், டிச. 15: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி செயலர் செந்தில்குமாருக்கு தமிழக அரசால் திருவள்ளுவர் பல்கலைக் கழக கல்விக் குழுவின் பாடத்திட்ட உறுப்பினராக தேர்ந்தெடுத்தமைக்கு இயக்குனர் நிர்வாகக்குழு அதிகாரிகள், பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் ஒருங்கிணைந்து கல்லூரி கலையரங்கத்தில் பாராட்டு விழாவை தாளாளர் சாமிக்கண்ணு தலைமையில் நடத்தினர்.

முதன்மையர் சவுந்தரராஜன் வரவேற்றார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்களின் சார்பாக வாழ்த்துரை வழங்கப்பட்டது.

கல்லூரி தாளாளர் பேசும்போது, உண்மையுடனும், நேர்மையுடனும் செயல்பட்டால் கடவுளின் அருளை உறுதியாய் பெற முடியும், பல பேராசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றியதன் விளைவே இ.எஸ்.கல்விக் குழுமத்தின் வெற்றி என கூறினார்.

தொடர்ந்து செயலர் கூறும்போது, பாடத்திட்ட கல்விக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுத்த தமிழக அரசிற்கு கல்லூரியின் சார்பாக நன்றியை தெரிவித்து கொள்கிறேன் என்றார். முடிவில் கணிதத்துறைத் தலைவர் பேராசிரியர் செல்வி நன்றி கூறினார்.

தினகரன்
15.12.13





விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் தாளாளர் சாமிக்கண்ணு பேசினார். அருகில் செயலர் செந்தில்குமார், பிரம்மச்சாரினி பிரம்மாஜி.

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு

விழுப்புரம், டிச. 1: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, ஏழுமலை தொழில் நுட்ப கல்லூரி மற்றும் தேசிய சிந்தனை கழகம் சார்பில் விவேகானந்தரின் 150வது பிறந்த ஆண்டை முன்னிட்டு கல்லூரி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கம் தாளாளர் சாமிகண்ணு தலைமையில் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நடந்தது. மாணவியர் புல முதன்மையர் சவுந்தரராஜன் வரவேற்றார். கல்லூரி செயலர் செந்தில்குமார் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி தாளாளர் சாமிகண்ணு இளைஞர்கள் பின்பற்ற வேண்டிய நல்லொழுக்கம், கடமைகள் போன்றவை குறித்து பேசினார்.

சிறப்பு விருந்தினராக உளுந்தூர்பேட்டை ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி இணை செயலர் பிரம்மச்சாரினி பிரம்மாஜி சங்கராச்சாரியார், விவேகானந்தர், காந்தி ஆகியோரின் வாழ்க்கை குறித்து விளக்கினார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகர், முதல்வர்(பொ) நடேசன், ஏழுமலை தொழில்நுட்ப கல்லூரி முதல்வர் அகோரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தினகரன்
01/12/13

**16** • தினகரன் • புதுச்சேரி **20.12.2013**



விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நடந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சென்னை தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தை சேர்ந்த செல்வக்குமார் பேசினார். அருகில் கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய்.

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் நீங்களும் தொழிலதிபராகலாம் நிகழ்ச்சி

விழுப்புரம், டிச. 20: விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நீங்களும் தொழிலதிபர் ஆகலாம் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. வணிகவியல்துறை தலைவர் செல்வக்குமார் வரவேற்றார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் அறிமுக உரையாற்றினார்.

சென்னை தொழில்முனைவோர் மேம்பாட்டு இயக்குனர் பாஸ்கரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பொருள் உற்பத்தி, மென்பொருள் உருவாக்குதல் ஆகியவை குறித்து விளக்கினார். விழுப்புரம் சிறுதொழில் முனைவோர் அமைப்பின் தலைவர் ஜெயக்குமார் சிறப்புரையாற்றினார்.

கல்லூரியின் வணிக மேலாண்மைத்துறை தலைவர் அருணா குமாரி, விழுப்புரம் மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மகாலிங்கம், தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் கிளை மேலாளர் பழனிவேல், மேலாளர் ராஜேந்திரன், அபிராமி விவசாய பொருள்கள் நிறுவனத்தின் தொழில் முனைவோர் மோகன், ஆகியோர் பேசினர். பொருளாதாரத்துறை தலைவர் சாந்தி நன்றி கூறினார்.

தினகரன் 20/12/13

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் மத நல்லிணக்க கொண்டாட்டம்

விழுப்புரம், டிச. 24: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி கலை அரங்கில் மத நல்லிணக்க நாள் கொண்டாடப்பட்டது. மாணவியர் குழு தலைவி யூஜினி வரவேற்றார். செயலர் செந்தில் குமார் தலைமைதாங்கினார். குழு உறுப்பினர் சித்ரா சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார். இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன் அறிமுக உரையாற்றுகையில், அதில் எல்லா உயிர்களையும் மதிக்க வேண்டும், வன்முறை என்பது அறவே கூடாது என்றார். சிறப்பு விருந்தினராக சென்னை சிவானந்தசரஸ்வதி, சேவாஸ்ரம் பொது செயலாளர் ராஜாராம் கலந்து கொண்டார்.

இதையடுத்து மாணவிகள் சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமத்துக்கு நன் கொடை அளித்தனர். மாணவிகளின் கலை நிகழ்ச்சி நடந்தது. மாணவிகள் குழுத்தலைவி ருத்ரா நன்றி கூறினார்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த மத நல்லிணக்க விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமத்தின் பொது செயலாளர் ராஜாராமிற்கு கல்லூரி செயலர் செந்தில்குமார் பரிசு வழங்கினார்.

தினகரன் 24/12/13

# மகளிர் கல்லூரி மாணவிகள் என்.எஸ்.எஸ்., சிறப்பு முகாம்

விக்கிரவாண்டி, டிச.26-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி மாணவிகளின் என்.எஸ்.எஸ்., முகாம் முண்டியம்பாக்கத்தில் நடந்தது.

முண்டியம்பாக்கம் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்த முகாம் துவக்க விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவி ரேணுகா ராஜவேல் தலைமை தாங்கினார். என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர் மங்கையர்கரசி வரவேற்றார்.

கல்லூரி இயக்குனர் கஸ்தூரி பாய் தனசேகரன், டீன் சவுந்திரராஜன், திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகதீசன், ஒன்றிய கவுன்சிலர் காமினி லட்சுமி நாராயணன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

துணைத்தலைவர் ராகவன் குமார், உதவி தலைமை ஆசிரியர் பழனி, வி.ஏ.ஒ., சோமசுந்தரம், முன்னாள் துணைத்தலைவர் பன்னீர் செல்வம், பேராசிரியர் அருண்குமார் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

முகாமில் ஆலயங்கள், தெருக்கள் சுத்தப்படுத்தும் பணி, எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணி, சுய தொழில் பயிற்சி முகாம், ரத்ததான விழிப்புணர்வு, சுகாதார விழிப்புணர்வு உள்ளிட்ட சேவை பணிகளை மாணவிகள் செயல்படுத்த உள்ளனர்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி என்.எஸ்.எஸ்., மாணவிகள் சார்பில் முண்டியம்பாக்கத்தில் நடந்த முகாமை கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் துவக்கி வைத்தார். அருகில் ஊராட்சி மன்ற தலைவர் ரேணுகா ராஜவேல்.

---

மாவட்டம்

Postal Regn. No. SSP/PY/69/2012-2014

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் ரோட்டரி சங்க துவக்க விழா

விழுப்புரம், டிச. 29: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி கலையரங்கில் ரோட்டரி சங்க துவக்க விழா நடந்தது. ஆறுமுகம் வரவேற்றார். கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு கலந்து கொண்டு பேசியதாவது, ரோட்டரி மொழி, மதம், இனம் எல்லாவற்றையும் கடந்து இந்தியாவில் வந்துள்ளது. அரசினை நம்பாமல் உலக நாடுகளின் பல்வேறு திட்டங்களை ரோட்டரி மூலம் செய்து வருகிறார்கள் என பேசினார். ரோட்டரி சங்க தலைவி மற்றும் பேராசிரியர் கார்த்திகா அறிமுக உரையாற்றினார். ரோட்டரி சங்க தலைவியாக மாணவி இந்துஜாவும், துணைத் தலைவியாக மாணவி மஞ்சுளாவும் பதவி பிரமானம் செய்து கொண்டனர்.

கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன், ரோட்டரி சரவணக்குமார், ராஜீலு, ரோட்டரி சங்க தலைவர் அல் போன் விகோரி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். துணைத் தலைவி மாணவி மஞ்சுளா நன்றி கூறினார்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த ரோட்டரி சங்க தொடக்க விழாவில் கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு குத்து விளக்கு ஏற்றினார். அருகில் இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன்.




மகளிர் கல்லூரியில்

## ரோட்டரி சங்க தொடக்க விழா

விழுப்புரம்,டிச.31–
தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி கலையரங்கில் ரோட்டரி சங்க தொடக்க விழா நடந்தது. ஆறுமுகம் வரவேற்றார். கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு கலந்துகொண்டு பேசுகையில், ரோட்டரி மொழி, மதம், இனம் எல்லாவற்றையும் கடந்து இந்தியாவில் வந்துள்ளது. அரசினை நம்பாமல் உலக நாடுகளின் பல்வேறு திட்டங் களை ரோட்டரி மூலம் செய்து வருகிறார்கள் என கூறினார். ரோட்டரி சங்க தலைவி மற்றும் பேராசிரியர் கார்த் திகா அறிமுக உரையாற்றினார். ரோட்டரி சங்க தலைவியாக மாணவி இந்துஜாவும், துணைத் தலைவியாக மாணவி மஞ்சுளாவும் பதவி பிரமானம் செய்து கொண்டனர். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன், ரோட்டரி சரவணக்குமார், ராஜீவு, ரோட்டரி சங்க தலைவர் அல்போன் விகோரி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். முடிவில் துணைத் தலைவி மாணவி மஞ்சுளா நன்றி கூறினார்.

தினத்தந்தி 31.12.13



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

## தெய்வானை அம்மாள் கல்லூரியில் பொங்கல் விழா

விழுப்புரம், ஜன. 12: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியின் கலையரங்கில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. பொருளாதாரத்துறை தலைவர் சாந்தி வாழ்த்துரை வழங்கினார். மாணவியர் புலமுதன்மையர் சவுந்திரராஜன் வரவேற்றார். தேர்வு கட்டுப்பாட்டாளர் நடேசன் மார்கழி மாதத்தின் சிறப்புகள், பொங்கலின் வரலாறு குறித்து பேசினார். தமிழாய்வுத்துறை பேராசிரியர் பொற்கலை சிறப்பு விருந்தினரான வேளாண்மை உதவி இயக்குனர் ஜெகன்நாதனை அறிமுகம் செய்தார். தமிழாய்வுத்துறை தலைவர் மங்கையர்க்கரசி நன்றி கூறினார்.

தினகரன் 12.01.14




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த குடியரசு தினவிழாவில் கல்லூரி செயலர் செந்தில்குமார் மாணவருக்கு சான்றிதழ் வழங்கினார்.

## தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் குடியரசு தினவிழா

விழுப்புரம், ஜன. 28: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. மாணவ பேரவை தலைவி யூஜினி அறிமுகவுரை ஆற்றினார். கல்லூரி செயலர் செந்தில்குமார், இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினரை சிறப்பு செய்தனர். பின்னர் கொடி ஏற்றத்துடன் மாணவிகளின் அணிவகுப்பு நடந்தது.

இதில் கல்லூரி இயக்குனர் பேசும்போது, இளைஞர்கள் நல்ல சிந்தனையோடு செயல்பட்டால் விரும்பிய குறிக்கோளை அடையமுடியும் என்றார்.

கல்லூரி செயலர் பேசும்போது, வளர்ச்சி அடைந்து வரும் பெண்கள் பல்வேறு சாதனைகளை ஆற்ற வேண்டும் என்றார்.

சிறப்பு விருந்தினர் ஆன்ட்ரூஸ் பேசும்போது, ஏழை மாணவர்களின் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த கல்லூரி செயல்பட்டு வருகிறது என்றார்.

வணிகவியல் துறை உதவி பேராசிரியர் ரஹமத் நிஷாவுக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டது. கல்லூரி பேருந்து பராமரிப்பாளர் சரவணன் பணியை பாராட்டி சிறப்பு செய்யப்பட்டது. இ.எஸ் இசைக்கல்விக்குழு மாணவர்களின் இசைத் திறமையை பாராட்டி சான்றிதழ் அளிக்கப்பட்டது. கல்லூரி மாணவி ருத்ரா நன்றி கூறினார்.

தினகரன் 28.01.2014

தினத்தந்தி

# விழுப்புரம் பகுதியில் குடியரசு தின விழா

விழுப்புரம், ஜன.29-
விழுப்புரம் பகுதியில் குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது.

## குடியரசு தின விழா

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர்கல்லூரியில் குடியரசுதினவிழாகொண்டாடப்பட்டது. விழாவுக்கு கல்லூரி செயலாளர் செந்தில் குமார் தலைமை தாங்கினார். விழாவில்சிறப்புவிருந்தினராக கலந்து கொண்ட ஆன்ட்ரூஸ் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து பேசினார்.



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் குடியரசு தின விழா நடந்த போது எடுத்த படம்.



விழுப்புரத்தை அடுத்த இ.எஸ்.நர்சிங் கல்லூரியில் குடியரசு தின விழா நடைபெற்ற போது எடுத்த படம்.

கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன், வணிகவியியல் துறை உதவி பேராசிரியர் ரஹமத்நிஷா, மாணவ பேரவை தலைவி யூஜினிமற்றும்பேராசிரியர்கள் மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர். விழுப்புரம் இ.எஸ். என்ஜினியரிங் கல்லூரியில் கல்லூரி முதல்வர் கருணாநிதி தலைமையில் கல்லூரி தலைவர் செல்வமணி தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இதில் கல்லூரி நிர்வாக அதிகாரி குப்புசாமி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர். விழுப்புரம் இ.எஸ். கல்வியியல் கல்லூரியில் இ.எஸ். கல்வி குழும ஆலோசகர் ரகோத்தமன் முன்னிலையில் கல்லூரி முதல்வர் (பொறுப்பு) செந்தில்முருகன் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். மேலும் மரக்கன்றுகள் நடப்பட்டன. ஏழுமலை பாலிடெக்னிக்கல்லூரியில் கல்லூரி நிர்வாக அதிகாரி கணேசன் தலைமையில் கல்லூரி முதல்வர் அகோரம் தேசிய கொடியை ஏற்றினார். இதில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவ-மாணவிகள் கலந்து கொண்டனர். விழுப்புரம் இ.எஸ்.மெட்ரிக்மேல்நிலைப் பள்ளியில் பள்ளி செயலாளர் பிரியா செல்வமணி தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இதில் ஆசிரியர்கள், மாணவ - மாணவிகள் கலந்து கொண்டனர்.

விழுப்புரத்தை அடுத்த சித்தணியில் உள்ள இ.எஸ்.செவிலியர் கல்லூரியில் மாவட்ட காசநோய் அதிகாரி

தினத்தந்தி
29-1-2014

8 புதுச்சேரி 28–1–14




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த குடியரசு தினவிழாவில் கல்லூரி செயலர் செந்தில்குமார் மாணவருக்கு சான்றிதழ் வழங்கினார்.

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் குடியரசு தினவிழா

விழுப்புரம், ஜன. 28-
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது. மாணவ பேரவை தலைவி யூஜினி அறிமுகவுரை ஆற்றினார். கல்லூரி செயலர் செந்தில்குமார், இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினரை சிறப்பு செய்தனர். பின்னர் கொடி ஏற்றத்துடன் மாணவிகளின் அணிவகுப்பு நடந்தது.

இதில் கல்லூரி இயக்குனர் பேசும்போது, இளைஞர்கள் நல்ல சிந்தனையோடு செயல்பட்டால் விரும்பிய குறிக்கோளை அடையமுடியும் என்றார்.

கல்லூரி செயலர் பேசும்போது, வளர்ச்சி அடைந்து வரும் பெண்கள் பல்வேறு சாதனைகளை ஆற்ற வேண்டும் என்றார்.

சிறப்பு விருந்தினர் ஆன்ட்ரூஸ் பேசும்போது, ஏழை மாணவர்களின் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த கல்லூரி செயல்பட்டு வருகிறது என்றார்.

வணிகவியல் துறை உதவி பேராசிரியர் ரஹமத் நிஷாவுக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டது. கல்லூரி பேருந்து பராமரிப்பாளர் சரவணன் பணியை பாராட்டி சிறப்பு செய்யப்பட்டது. இ.எஸ் இசைக்கல்விக்குழு மாணவர்களின் இசைத் திறமையை பாராட்டி சான்றிதழ் அளிக்கப்பட்டது. கல்லூரி மாணவி ருத்ரா நன்றி கூறினார்.

தமிழ் முரசு
28.1.2014

# கல்லூரியில் உயிர் வேதியியல் கருத்தரங்கு



கருத்தரங்கில் பேசுகிறார் புதுவை பல்கலைக்கழக பேராசிரியர் சுதாராணி.

விழுப்புரம், ஜன. 29: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் உயிர் வேதியியல் துறை தொடர்பான கருத்தரங்கு அத் துறை சார்பில் புதன்கிழமை நடைபெற்றது.

'வளர்ந்து வரும் காலத்திற்கான மருத்துவ மாற்றம்' என்ற தலைப்பில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் உயிர் வேதியியல் துறை தலைவர் எம்.அருள்நங்கை வரவேற்றார். கல்லூரி இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் புதுவை பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சுதாராணி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று பேசினார். உயிர் வேதியியல் துறை ஆசிரியை பி.ஸ்ரீதேவி நன்றி கூறினார். பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 100 மாணவ, மாணவிகள் பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்தனர். சிறந்த ஆய்வுக் கட்டுரைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

* தினமணி
30-1-14



விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாநில அளவிலான உயிர் வேதியியல் துறை கருத்தரங்கம் நடந்தது.

# மகளிர் கல்லூரியில் மாநில கருத்தரங்கம்

விழுப்புரம், ஜன.30-
விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாநில அளவிலான உயிர் வேதியியல் துறை கருத்தரங்கம் நடந்தது.

கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் தலைமை தாங்கினார். உயிர்வேதியியல் துறை தலைவர் அருள்நங்கை வரவேற்றார். வளர்ந்து வரும் காலத்திற்கான மருத்துவ மாற்றம் மற்றும் பரிசோதனை குறித்து, புதுச்சேரி பல்கலைக் கழக பேராசிரியர் டாக்டர் சுதாராணி சிறப்புரை நிகழ்த்தினார்.


இதில், பல கல்லூரிகளைச் சேர்ந்த 100 மாணவ, மாணவிகள் ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தனர். சிறந்த ஆய்வு கட்டுரைகளுக்கு சிறந்த பரிசுகள் வழங்கப்பட்டது.

உயிர் வேதியியல் துறை ஆசிரியை ஸ்ரீதேவி நன்றி கூறினார்.

* தினமலர்
30.01.2014

1-2-14

தமிழ் முரசு




விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நடந்த முன்னாள் மாணவியர் சந்திப்பு கூட்டத்தில் செயலர் செந்தில்குமார் பேசினார்.

## தெய்வானை அம்மாள் கல்லூரியில்

# முன்னாள் மாணவியர்கள்- சந்திப்பு கூட்டம்

விழுப்புரம், பிப். 1- விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் முன்னாள் மாணவியர் சந்திப்பு கூட்டம் கல்லூரி அரங்கில் நடந்தது. பொருளாதாரதுறை தலைவர் சாந்தி வரவேற்றார். இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் சமுதாயத்துக்கும், மக்களுக்கும் தொடர்ந்து ஆற்றும் சேவை கல்லூரிக்கு பெருமையை சேர்க்கும் என்றார். செயலர் செந்தில் குமார் நட்பின் தன் மையை வெளிகாட்டும் வகை யில் இங்கு வந்துள்ள அனைத்து முன்னாள் மாணவிகளும் பெருமைக்குரியவர்கள் என்றார். புல முதன்மையாளர் சவுந்திரராஜன், தேர்வு கட்டுப்பாடு அலுவலர் நடேசன் ஆகியோர் பேசினர். இதையடுத்து முன் னாள் மாணவிகள் தங்களின் கல்லூரி கால அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட முன்னாள் மாணவிகள் அனைவருக்கும் நினைவு பரிசை கல்லூரி இயக்குனர் மற்றும் செயலர் வழங்கினர்.

வேதியியல்துறை தலைவர் தேவி நன்றி கூறினார். முன்னாள் மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடந்தது.

தமிழ் முரசு
1-2-14

---

## விழுப்புரம்

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் மாநில அளவிலான கருத்தரங்கு

விழுப்புரம், பிப். 5: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி அரங்கில், கணிதத்துறை சார்பில் மாநில அளவிலான கருத்தரங்கு நடந்தது. துறைத் தலைவி செல்வி வரவேற்றார். இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் அறிமுக உரையாற்றினார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக உதவி பேராசிரியர் சீனிவாசன் பிக்ஸட் பாயிண்ட் தியரி அண்ட் இட்ஸ் அப்ளிகேஷன்ஸ் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். இதில் 15க்கும் மேற்பட்ட கல்லூரியை சேர்ந்த 225 பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் மாணவ, மாணவிகள் தங்களது ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தனர். கணிதத்துறை பேராசிரியர் அகிலா நன்றி கூறினார்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் பரிசு வழங்கப்பட்டது.

தினகரன் - 5/2/14

தினகரன்
5.2.14

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் மாநில அளவிலான கருத்தரங்கம்

விழுப்புரம், பிப். 8: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வேதியியல்துறை சார்பில் மாநில அளவிலான கருத்தரங்கு நடந்தது. வேதியியல்துறை பேராசிரியர் தேவி வரவேற்றார். கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் அறிமுக உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக சென்னை அமிட் பல்கலைக் கழக புல ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் கலந்துகொண்டு, வேதியியல் நம் வாழ்க்கையில் எவ்வித மாற்றங்களையும், பயன்களையும் விளைவிக்கிறது என்பது குறித்து பேசினார். இதில் 12 கல்லூரியை சேர்ந்த 163 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். முதல் மற்றும் இரண்டாம் இடத்தை பெற்ற மாணவர்களுக்கு பாலசுப்பிரமணியன் பரிசு வழங்கினார். வேதியியல்துறை பேராசிரியர் அபிநயா நன்றி கூறினார்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடந்த கருத்தரங்கை சிறப்பு விருந்தினர் பாலசுப்பிரமணியன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். அருகில் கல்லூரி இயக்குனர் கஸ்தூரிபாய்.

தினகரன்
8.2.2014



தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் விளையாட்டு விழா

# போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு

**டி.ஐ.ஜி. முருகன் வழங்கினார்**

விழுப்புரம்,பிப்.24–

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் விளையாட்டு விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு கல்லூரி செயலாளர் எஸ். செந்தில்குமார் தலைமை தாங்கினார். விழாவில் விழுப்புரம் சரக போலீஸ் டி.ஐ.ஜி. முருகன் கலந்து கொண்டு தேசிய கொடியை ஏற்றி வைத்து போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி பேசினார்.

விழாவில் கல்லூரி இயக்குனர் டாக்டர் கஸ்தூரிபாய் தனசேகரன், கல்லூரி புல முதன்மையர் சவுந்தர்ராஜன், மாணவி பேரவை செயலர் தேவகி, விளையாட்டு பயிற்சியாளர் முத்துக்குமார், பேராசிரியர் பிரியா உள்பட பலர் கலந்துகொண்டனர். விளையாட்டு போட்டிகளின் வெற்றிக்கோப்பையை கல்லூரி ஆங்கிலத்துறை மாணவிகள் பெற்றனர். விழாவின் இறுதியில் மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தினத்தந்தி 24.2.14

விழுப்புரத்தில்

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் விளையாட்டு விழா

விழுப்புரம், பிப். 27: விழுப்புரத்தில் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் விளையாட்டு விழா நடந்தது.

விழுப்புரம் சரக டி ஐ ஜி முருகன் தலைமை தாங்கினார். பயிற்சியாளர் முத்துக்குமார் வரவேற்றார். மாணவியர் புல முதன்மையர் சவுந்திரராஜன் சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தினார். ஒலிம்பிக் கொடியை கல்லூரி செயலர் செந்தில்குமாரும், கல்லூரி கொடியை இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரனும் ஏற்றி வைத்து பேசினர். டி ஐ ஜி முருகன் மாணவியர் ஒவ்வொரு நாளையும், உற்சாகமான நாளாக உருவாக்கி, பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். இதையடுத்து விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. மேலும் போட்டிகளில் வெற்றி பெற்ற பேராசிரியர்கள், சிறப்பு விருந்தினர்கள், மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. அதிக போட்டிகளில் ஆங்கிலத்துறையை சேர்ந்த மாணவிகள் வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றினர். விளையாட்டுதுறை பேராசிரியர் பிரியா நன்றி கூறினார்.

தினகரன்
27.2.14

# மாணவிகள் பேரவை நிறைவு விழா



விழாவில் பேசுகிறார் விவேகானந்தா மகளிர் கல்லூரியின் முதல்வர் கே.ராமகிருஷ்ணன்.

விழுப்புரம், மார்ச் 15: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவிகள் பேரவை நிறைவு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவில் மாணவி ஜெ.ருத்ரா வரவேற்றார். மாணவிகள் புல முதன்மையர் இ.சௌந்தரராஜன் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். இயக்குநர் கஸ்தூரி பாய் தனசேகரன் தலைமை வகித்தார். பேரவைத் தலைவர் எஸ்.யூஜீன் ஆண்டறிக்கை வாசித்தார். இந் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சீர்காழி விவேகானந்தா மகளிர் கல்லூரியின் முதல்வர் கே.ராமகிருஷ்ணன் பங்கேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சி நிறைவில் வரும் கல்வி ஆண்டின் மாணவிகள் பேரவைத் தலைவியாக எம்.பிரசாந்தி, துணைத் தலைவி ஏ.ராபியா பேகம் ஆகியோர் பங்கேற்றனர்.

தினமணி
17-03-14



விழுப்புரம் தெய்வானை அம்மாள் கல்லூரியில் நடந்த கருத்தரங்கை தமிழாய்வுத்துறை இணைபேராசிரியர் நல்லசிவம் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். அருகில் தாளாளர் சாமிக்கண்ணு.

# தெய்வானை அம்மாள் கல்லூரியில் கருத்தரங்கு

விழுப்புரம், மார்ச் 7- விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தமிழாய்வுத்துறை சார்பில் தேசிய கருத்தரங்கு நடந்தது. தமிழாய்வுத்துறை தலைவர் மங்கையர்க்கரசி வரவேற்றார். இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் தொடக்க உரையாற்றினார். தாளாளர் சாமிக்கண்ணு வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினர் தஞ்சாவூர் தமிழ்பல்கலைக்கழகம் தமிழாய்வுத்துறை இணைபேராசிரியர் நல்லசிவத்தை விரிவுரையாளர் கீதா அறிமுகம் செய்தார். பன்முக நோக்கில் வள்ளலார் பாடல்கள் என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது.

இதில் வள்ளியம்மை கலை அறிவியல் கல்லூரி மாணவிகள் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்தனர். விழுப்புரம் வள்ளலார் சபையை சேர்ந்த அண்ணாமலை சிறப்புரை ஆற்றினார். தமிழாய்வுத்துறை பேராசிரியர் பொற்கலை நன்றி கூறினார்.

07-03-14

# மகளிர் கல்லூரியில் பேரவை நிகழ்ச்சி

விழுப்புரம், மார்ச் 17- விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை விழா இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன் தலைமையில் நடந்தது.

மாணவி ருத்ரா வரவேற்றார். புல முதன்மையர் சவுந்திரராஜன் முன்னிலை வகித்தார். பேரவை தலைவி யூஜின் ஆண்டறிக்கை வாசித்தார். சீர்காழி விவேகானந்தா மகளிர் கல்லூரி முதல்வர் ராம கிருஷ்ணன் பல துறைகளில் அதிக மதிப்பெண் பெற்று வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசு மற்றும் சான்று வழங்கினார்.

அடுத்த கல்வியாண்டிற்குரிய பேரவை பொருப்புகளை தலைவி பிரசாந்தி, துணை தலைவி ராபியா பேகம் பெற்று கொண்டனர். மாணவி அரிஷ்மா நன்றி கூறினார்.




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை விழா இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன் தலைமையில் நடந்தது.

தினமலர் 17-03-14




விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை நிறைவு விழா நடந்தது.

## தெய்வானை அம்மாள் கல்லூரியில் மாணவியர் பேரவை நிறைவு விழா

விழுப்புரம், மார்ச் 18: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மாணவியர் பேரவை நிறைவு விழா நடந்தது. மாணவி ருத்ரா வரவேற்றார். மாணவியர் புல முதன்மையர் சவுந்தர்ராஜன் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன் தலைமை தாங்கினார். பேரவை தலைவி யூஜின், பேரவை உறுப்பினர் வித்யா, சேவை குழுக்களின் செயலாளர் இந்துஜா, மாணவியர் விடுதி செயலாளர் லட்சுமி, விளையாட்டுத்துறை செயலாளர் தேவகி, சரஸ்வதி ஆண்டறிக்கைகளை வாசித்தனர். சிறப்பு விருந்தினர் சீர்காழி விவேகானந்தா மகளிர் கல்லூரி முதல்வர் ராமகிருஷ்ணன் கலந்து கொண்டு பேசினர். மாணவிகளுக்கு சான்றிதழ், நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது. மாணவியர் பேரவை தலைவி பிரசாந்தி, துணைத் தலைவர் ராபியாபேகம் ஆகியோர் பொறுப்பு ஏற்றுக்கொண்டனர். மாணவி ஹரிஷ்மா நன்றி கூறினார்.

தினகரன் 18-03-14

## தணிக்கையியல் கருத்தரங்கு



தணிக்கையியலின் முக்கியத்துவம் குறித்த சிறப்பு கருத்தரங்கில் பேசுகிறார் கல்லூரியின் இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன்.

விழுப்புரம், மார்ச் 18: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் வணிகவியல், வணிக மேலாண்மை மற்றும் பொருளாதாரம் ஆகிய மூன்று துறைகள் இணைந்து தணிக்கையியலின் முக்கியத்துவம் குறித்த சிறப்பு கருத்தரங்கத்தை செவ்வாய்க்கிழமை நடத்தின.

கல்லூரி இயக்குநர் கஸ்தூரி பாய் தனசேகரன், சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். புதுச்சேரி தென்மண்டல தணிக்கை ஆலோசகர் பிரபாகர், குமரகுரு மற்றும் மீனாட்சி சுந்தர் உள்ளிட்ட பலர் பேசினர்.

தணிக்கையியல் கல்வியில் சேர்ந்து படிப்பதற்கான வழிமுறைகள், பயன்பாடுகள் மற்றும் அக் கல்வியின் சிறப்பியல்புகள் குறித்த கருத்துகளை மாணவர்களுக்கு விளக்கும் வகையில் பேசினார். வணிகவியல் துறைத் தலைவர் செல்வக்குமார், வணிகமேலாண்மைத் துறைத் தலைவர் அருணாகுமாரி, பொருளாதார துறைத் தலைவர் சாந்தி ஆகியோர் பங்கேற்று மாணவியரை வாழ்த்தி பேசினர்.

வணிக மேலாண்மை துறைத் தலைவர் அருணாகுமாரி நன்றி கூறினார்.

தினமணி 19-03-14

## மகளிர் கல்லூரியில் கல்லூரி தின விழா

விழுப்புரம், மார்ச் 30-

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கல்லூரி தின விழா நடந்தது.

கல்லூரி தாளாளர் சாமிக்கண்ணு தலைமை தாங்கினார். முனைவர் அருணாகுமாரி வரவேற்றார். பேராசிரியர் அருள் நங்கை, கணிதத்துறை தலைவர் செல்வி ஆண்டறிக்கை வாசித்தனர்.

மாணவியர் புல முதன்மையர் சவுந்தரராஜன் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி இயக்குனர் கஸ்துாரிபாஸ் தனசேகரன் கல்லூரி சாதனைகளை கூறினார். புதுச்சேரி பாரதிதாசன் மகளிர் கல்லூரி முதல்வர் வரலட்சுமி சிறப்புரையாற்றினார்.

முதல் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு லேப் டாப் வழங்கப்பட்டது. சிறந்த துறையாக தமிழ் துறை தேர்ந்தெடுக்கப்பட்டு பேராசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. பொருளாதார துறை தலைவர் சாந்தி நன்றி கூறினார்.

## மகளிர் கல்லூரி தீப ஒளி விழா

விழுப்புரம், மார்ச் 30-

தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தீப ஒளி விழா நடந்தது.

விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் தீப ஒளி விழா நடந்தது. வேதியியல் துறை பேராசிரியர் தேவி வரவேற்றார். மாணவியர் புல முதன்மையர் சவுந்தரராஜன் வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி இயக்குனர் கஸ்துாரிபாஸ் தனசேகரன் சிறப்புரையாற்றினார். ஆங்கில துறை மாணவி பிரின்ஸ் பிரியா நன்றி கூறினார்.

தினமலர் 30-03-14

## கல்லூரி தினவிழா




தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரி தினவிழாவில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிக்கு மடிக்கணினியை வழங்குகிறார் கல்லூரித் தாளாளர் இ.சாமிக்கண்ணு.

விழுப்புரம், மார்ச் 29: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கல்லூரி தினவிழா சனிக்கிழமை நடைபெற்றது.

இவ் விழாவுக்கு கல்லூரித் தாளாளர் இ.சாமிக்கண்ணு தலைமை வகித்தார். புதுச்சேரி பாரதிதாசன் மகளிர் கல்லூரி முதல்வர் எஸ்.வரலட்சுமி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். கல்லூரிச் செயலர் செந்தில்குமார், கல்லூரி இயக்குநர் கஸ்தூரிபாய் தனசேகரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இக் கல்லூரியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு மடிக்கணினி பரிசாக வழங்கப்பட்டது.

தினமணி 30-03-14

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கல்லூரி தினவிழா

விழுப்புரம், மார்ச் 30: விழுப்புரம் தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கல்லூரி தினவிழா நடந்தது. முனைவர் அருணாகுமாரி வரவேற்றார். பேராசிரியர் அருள் நங்கை கல்வியாண்டின் கல்விசார் ஆண்டறிக்கையை வாசித்தார். மாணவியர் புல முதன்மையர் சவுந்தர்ராஜன் மாணவிகளின் செயல்பாடுகள், சமூக சேவைக்குழுக்களின் ஆண்டறிக்கையை வாசித்தார். தேர்வு கட்டுப்பாட்டுத்துறை ஆண்டறிக்கையை கணிதத்துறை தலைவர் செல்வி வாசித்தார். கல்லூரி செயல்பாடுகள், சாதனைகள் குறித்து இயக்குனர் கஸ்தூரிபாய் தனசேகரன் விளக்கி கூறினார். இதில் சிறப்பு விருந்தினராக புதுச்சேரி பாரதிதாசன் மகளிர் கல்லூரி முதல்வர் வரலட்சுமி கலந்து கொண்டு பேசினார். தாளாளர் சாமிக்கண்ணு முதல் மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு மடிக்கணினியை வழங்கினார். சிறந்த துறையாக தமிழாய்வுத்துறை தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டது. பொருளாதாரத் துறை தலைவர் சாந்தி நன்றி கூறினார்.



விழுப்புரம், தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் கல்லூரி தினவிழா நடந்தது.

தினகரன்
30-04-14

# "Vast job potential for CA students"

Special Correspondent

**VILLUPURAM:** There are hardly 2.2 lakh chartered accountants for 1.2 billion people in the country and it indicates the vast employment potential that exists for students joining chartered accountancy course.

With the removal of trade barriers, career opportunity for CA students has become global, according to K. Kumaraguru, Vice-Chairman of the Puducherry branch of Southern India Regional Council of the Institute of Chartered Accountants of India (ICAI). He was speaking at a "CA career counselling programme" organised by Theivanai Ammal College for Women here.

Mr. Kumaraguru said that the ICAI had come into being in 1949 by an Act of Parliament. As of now, it had 140 branches across the country, 22 chapters outside India and an overseas office at Dubai. There were 11.90 lakh students pursuing CA course. It was wrong to assume that the CA course was difficult to crack. Anybody who was interested in business and financial and knowledge management could easily clear the course.

THE HINDU
23.03.2014